www.tamilarangam.net

# வெகுஜனம்

ணம்-3 பெப்ரவரி-மார்ச் 1991-குரல்-4




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'OSAI'
20 RUE DE LA FOLIE MERICOURT
75011 PARIS



# என்றும் நினைவில் சொய்சா...

மக்கள்பலியை மரணபயத்தை
நியாயப்படுத்தி சொகுசான
வாழ்க்கை வாழ்வோருக்கு
சொய்சா நீ சிம்மசொப்பனம்
சென்ற ஆண்டு மனிதமிருகங்களால்
நீ பலியெடுக்கப் பட்டபோது
அலட்டிக்கொள்ளாத பலர் இந்த
ஆண்டு தம்வயிறு வளர்க்க உன்னை
சொல்லியே ஒன்று கூடுகிறார்கள்
ஜனநாயக காவலனாய் சிறப்பு
பரிசு பெற்றது இவர்களுக்காக அல்ல
மனிதநேய உலகிலிருந்து உன்னை
பாசிஸ்டுகளாலும் பச்சோந்திகளாலும்
என்றுமே பறித்தெடுக்க முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஒன்பது மாதங்களாக தொடரும் அர்த்தமற்ற யுத்தத்தினால் மக்கள் துன்ப துயரங்களால், பசி பட்டினியால் விழிபிதுங்கி நிற்கின்றனர். பாசிசக் கூட்டாளிகளான ஸ்ரீ லங்கா அரசும், புலிகளும் தமிழ் பிரதேசங்களை, தமிழ் பேசும் மக்களை பங்கு போட்டு சுரண்டுவதிலும், அழிப்பதிலும் ஒருவருக்கொருவர் சளைத்தவர் இல்லையென்பதை நிருபித்து வருகின்றனர்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாகிப் போன பாசமிகு மக்களின் அவலக்குரல்கள் கடல்கடந்து கேட்காமல் இலங்கை அரசும் ,புலிகளும் மக்களின் குரல்வளைகளை நெரித்து வருகின்றனர். மீறி வரும் குரல்களும் உலகில் ஏகாதிபத்திய அடி வருடிகளால் மலினப்படுத்தப்பட்டுள்ள பிரச்சனைகளால் அடித்து செல்லப்படுகின்றன. சர்வ தேச ரீதியாக புலிகளின் அராஜகம் வெளி நாடுகளில் அம்பலமாவதும், புலிகள் சர்வதேசகடத்தல் காரர்களாயும், பயங்கர வாதிகளின் கூட்டாளிகளாய் உலாவருவது அம்பலமாகியுள்ளதும் கடல்கடந்து வரும் அடக்கப்படும் மக்களின் குரல்களை அர்த்தமற்றதாக்கி விடுகின்றன

அகதிகளுக்கு உதவிபுரியும் சமூக நிறுவனங்களும் மிகக் குறைவு. இருக்கும் ஒரு சில [illegible] மற்போ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்க அரசியல் சக்திகளின் கோரிக்கையாலும் அரசுவடக்கு கிழக்குக்கு அனுப்பி வரும் அத்தியாவசியப் பொருட்கள் புலிகளினால் அபகரித்து செல்லப்படுகின்றன. சமூக நிறுவனங்கள் வழங்கும் உதவிகள் அகதிகளுக்கு போதாமல் உள்ளன.

இலங்கையரசு தான் தோன்றித் தனமாக நடாத்திவரும் விமானத்தாக்குதல்களால் மக்கள்அஞ்சி அஞ்சி செத்துக்கொண்டிருக்கின்றனர். வடக்குகிழக்கிலிருந்து வெளிநாடு செல்பவர்களின் வீடுகள் சொத்துக்கள் புலிகளால் பறிமுதல் செய்யப்படுவதோடு துரோகி என்ற சிறப்பு, புலிகளின் வரிச்சுமைகளை மக்கள் தாங்க முடியாதுள்ளனர். வவுனியாவிலிருந்து கொழும்பு செல்ல எழுபத்தைந்து ரூபா செலவிடும் அதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்ல புலிகளுக்கு எழுநூற்றம்பது ரூபா செலுத்தவேண்டியுள்ளது. அத்தோடு புலிகளின் அனுமதி அட்டையும் பெறவேண்டும் அனுமதி அட்டைபெறுவதற்கு பத்தாயிரம் ரூபாசெலுத்தவேண்டியுள்ளது.

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் புலிகளுக் கெதிரான கெடுபிடிகளும் தென்னிந்திய கரையோர பாதுகாப்பு இறுக்கங்களும் புலிகளுக்கு வடக்கு கிழக்கில் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். இது தொடருமாயின் புலிகள் அரசுடன் பேச்சு வார்த்தைக்குஇறங்குவதும் இதைத்தந்திரோபாயம் என்பதும் எதிர்கால நாடகமாக மேடை யேற்றப்படடால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மண்எண்ணெயை பதுக்கினால் மண்மீட்பு கிடைக்குமா? வியாபாரிகளே ஏழை வயிற்றில் அடிக்காதே? பொம்மருக்கும் பங்கர் அங்கர் பால்மாவுக்கும் பங்கரா? போன்ற வாசகங்களை தாங்கியபடி யாழ்பல்கலைக் கழகத்திலிருந்து யாழ் கச்சே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரியை நோக்கி பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் குழந்தைகள்பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர். அரசையும் இவர்களின் கூட்டாளிகளான வியாபாரிகளையும், மறைமுகமாக புலிகளையும் எதிர்த்து நடாத்தப்பட்டுள்ள இப்பேரணி இன்றைய காலகட்டத்தில் ஒரு திருப்புமுனையாகும்.

மக்கள் தெருவில் இறங்கிப் போராடுவதென்பது புலிகளுக்கு அலர்ஜியாகும். அப்படி இருக்கையில் இப்பேரணி நடாத்தப்பட்டுள்ளது புலிகள் எங்கோ பலவீனப்பட்டுள்ளதை மறைமுகமாக எடுத்துரைக்கிறது. புலிகளின் அடக்குமுறை அராஜகம் உச்சக்கட்டத்தை அடையும் போது, அரசின் இனப்படுகொலைகள் எல்லை மீறும் போது, பஞ்சம் வலுவடைந்து மக்கள் மரணிக்கும்போது, சுயாதீனமாக லட்சக்கணக்கில் மக்கள் அணிதிரளும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இப்போது நடாத்தப்பட்டுள்ள பேரணி அதற்கான உந்துதலை ஏற்படுத்தியே தீரும். மக்கள் புலிகளின் அடக்கு முறையாலும், அரசின் ஒடுக்கு முறையாலும், இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையில்எழுச்சி கொள்வதென்பது தவிர்க்க முடியாததாகி விடும் என்பதை வரலாறுகள் எமக்கு நிரூபித்து நிற்கின்றன.

உலகக்கண்ணாடி-1

## வார்சோ ஒப்பந்தம் கலைப்பு

பெப்ரவரி இறுதிப்பகுதியில் 'ஹங்கேரியின் தலைநகரான புடபெஸ்டில் கிழக்குரொப்பிய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற மாநாட்டில் சோவியத் பாதுகாப் அமைச்சர் ஜஸ்ஸோ பேச்சைகயில் கடந்தகாலத்தில். நாங்கள் உருவாக்கிய வார்ஸோ ஒப்பந்த அடிப்படையிலான இராணுவக்கூட்டு இன்றுடன் கலைக்கப் படுகின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே எழுந்துள்ள உள்நாட்டுப் பிரச்சனைகளே இதற்கான முக்கிய காரணமாகும் என்று குறிப்பிட்டார். நாற்பத்தியெட்டாம் ஆண்டில் செக்கஸ்லோவாக்கியாவில் சோவியத் யூனியனின் இராணுவம் நேச்சப்படையாக ஈடுபட கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்போது செக்கஸ்லோவாக்கியா, ஹங்கேரி போன்ற நாடுகள் இப்போது நிலை கொள்வதை விரும்பவில்லை என்பதுடன் சோவியத்யூனியனும் விரும்பவில்லை என்று குறிப்பிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "பெண் விடுதலையும் பூர்சுவாப் பெண்களும்."

சோவியத் போல்சுவிக் கட்சியின் மத்திய கமிட்டியின் உறுப்பினராகவும் புரட்சியின் பின் சமூக நலத்துறை அமைச்சராயும் பணியாற்றிய சிறப்புமிகு பெண்மணி தோழர் அலெக்ஸாண்டர் கொலன்ரை (ALEXANDRA KOLOONTAI) எழுதிய பெண் விடுதலையின் சமூக அடிப்படை என்னும் கட்டுரையில் 'பெண்விடுதலையும் பூர்சுவாப் பெண்களும்' என்ற பகுதியில் சிலவற்றை கீழே தருகிறோம். (நன்றி-புதிய பாதை-ஜனவரி 1986.)

19ம் நூற்றாண்டு கடைப்பகுதியில் பெண்கள் விடுதலை பற்றிய இயக்கங்கள் வளர்ந்து வர ஆரம்பித்தது. இது பூர்சுவாப் வர்க்கப் பெண்களிடையே முக்கியத்துவம் பெற்றும் வந்தது. இதற்கு முன்பாகவே பாட்டாளி வர்க்கப் பெண்கள் உழைப்புச்சந்தைக்கு வந்து விட்டனர். முதலாளித்துவத்தின் பயங்கரத் தாக்குதலின் பின்னர் நடுத்தர வர்க்கக் குடியினர் தமக்கு தேவையான பண்டங்களை வாங்க முடியாது பாதிக்கப் பட்டனர். இதனால் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தினால் குட்டி, நடுத்தர பூர்சுவா வர்க்கத்தினரின் வாழ்க்கை நிலை ஈடாட்டம் காணத் தொடங்கியது. இதனால் பூர்சுவாப் வர்க்கப் பெண்களும் மிகவும் பாதிக்கப் பட்டனர். அவர்கள் வறுமையை ஏற்றுக் கொண்டு, வேலை பெறும் உரிமையைப் பெற வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப் பட்டனர். இச் சமூகக் குழு சார்ந்த மனைவியரும், பெண் பிள்ளைகளும், பல்கலைக் கழகங்களிலும், கலைக்கூடங்கள், பத்திரிகை நிலையங்கள் மற்றும் பிற அலுவலகங்கள் ஆகியவற்றிலும் வேலை தேடும் நிலைக்கு உள்ளானார்கள்.

பூர்சுவா வர்க்கப் பெண்கள் விஞ்ஞானத்திலும், கலாச்சார உயர் நிலைகளிலும் இடம் பெற எண்ணியது திடீரென அவர்களது மன மாற்றத்தால் ஏற்றட்டதல்ல.

அன்றாட உணவுப் பிரச்சினையே அப்பெண்களை உழைக்கும் துறையில் தள்ளியது. இப் பூர்சுவாப் பெண்களின் உயர் கல்வி, உழைப்புத் துறை போன்றவற்றில் ஆண்களிடமிருந்து எதிர்ப்பு ஏற்படவே செய்தது. உத்தியோக வாய்ப்புப் பெற்றிருந்த ஆண்களுக்கும், அன்றாட உணவுக்கு உழைக்க நேரிட்ட பெண்களிற்கிடையிலும் போராட்டம் நடக்கவே செய்தது. பூர்சுவாப் பெண்கள் தங்கள் பலம் முழுவதையும் கொண்டு [illegible]கு எதிராகப் போராட நேரிட்டது.

உழைப்புச் சந்தையில் நுழைந்ததும், இப் பூர்சுவாப் பெண்கள் தாம்தான் பெண்கள் இயக்கத்தின் முன்னணியினர் எனப் பெருமையுடன் கூறிக் கொண்டனர். இவர்கள் பொருளாதாரச் சுதந்திரத்தில் ஓரளவு வெற்றி பெறும் வேலையில் தாம் தங்கள் இளைய சகோதரிகளான உழைக்கும் பெண்களின் வழி வந்தவர்கள் என்பதை மறந்து விடுகின்றனர்.

பூர்சுவாப் பெண்களின் இயக்கங்கள் ஆரம்பிப்பதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே எல்லா நாடுகளிலும் பல நூற்றுக்கணக்கான பாட்டாளி வர்க்கப் பெண்கள் தொழிற்சாலைகளாலும், தொழில் அதிபர்களாலும் கடுமையாக சுரண்டப் பட்டுக் கொண்டிருந்தனர். இந்நிலையை மறந்து பூர்சுவா வர்க்கப் பெண்கள் தாங்கள் தான் முதலில் உழைக்க ஆரம்பித்தவர்கள் என்று கூற முடியுமா?

பூர்சுவா வர்க்கப் பெண்கள் சமூகத்தில் தாம் சுதந்திரமான பெண்கள் என பெருமைப்படும் நிலையை அடைந்ததற்கு உழைக்கும் பாட்டாளி வர்க்கப் பெண்களே அடித்தளமாகும். வரலாற்றுப் பொருள் முதல்வாதத்தைப் பின்பற்றுபவர்கள் ஆண், பெண் என்ற பால்பேதமின்றிச் சுதந்திரமாகவும், முழுமையாகவும் அனைவரும் எல்லாவிதத் துறைகளிலும் முன்னேற வாய்ப்புள்ளவர்கள், பெண்கள் விடுதலை என்று பிரித்துப் பேசுவதை எதிர்ப்பர். அனைத்தையும் இன்றைய சமூகத்திற்குரிய பெரும் பிரச்சனை எனவே கொள்வர். குறிப்பிட்ட பொருளாதார நிலைப்பாடுகளே பெண்ணடிமைக்குப் பின்னாக உள்ளது. மற்றும் இயற்கை காரணமாக உள்ள நிலைகள் இரண்டாந்தரமானவை. இந்நிலைகள் முற்றாக மறைய வேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய சமூக உற்பத்தி முறையினாலேயே உலகில் பெண்கள் உண்மையான சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அடைய முடியும். இன்றிருக்கும் அமைப்பின் மூலம் பெண்களின் வாழ்வில் ஓரளவு வளர்ச்சி ஏற்படுவது முடியாத காரியமல்ல. ஆனால் தற்கால உற்பத்தி முறைகள் முழுமையாக மாற்றியமைக்கப்படுவதன் மூலமே தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலாள வர்க்கத்தின் ஒவ்வொரு வெற்றியும், மனித இனத்தின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் அடையும் நோக்கைக் கொண்டதாகும். அதே போல பெண்ணினம் பெறும் ஒவ்வொரு வெற்றியும் முழு விடுதலையை நோக்கிய பயணமேயாகும்.

அரசியல் சமத்துவத்தை வேண்டிய பெண்களின் கோரிக்கை அவர்களது அடிப்படைத் தேவையாகும். பூர்சுவாப் பெண்கள் இன்று நிலவும் வர்க்க சமுதாயத்திலே சமத்துவம் வேண்டி நிற்கின்றனர். அவர்களுக்கு இன்றைய சமுதாயத்தின் அடித்தளத்தை தகர்க்கும் நோக்கமில்லை. இதனால் பூர்சுவாப் பெண்கள் விடயங்களைப் புரிந்து கொள்ளவில்லையென நாம் கூற முடியாது. அவர்களது வர்க்க நிலைக் கண்ணோட்டமே அவர்களின் அச்செயலுக்குத் தடைக்கல்லாக இருக்கிறது.

ஆகவே வர்க்க சமுதாயத்திலே ஐக்கியப்பட்ட ஒரு பெண்கள் இயக்கத்தை அமைக்க முடியுமா? என்ற வினா எழுகிறது. பெண்கள் விடுதலை இயக்கங்களில் பங்கு பற்றுபவர்கள், பரந்து பட்ட பெண்கள் சமூகத்தை பிரதிபலிப்பவர்கள் எனக் கூற முடியாது என்பதை யாவரும் அறிவர். ஆண்களின் உலகம் பிரிந்திருப்பது போலவே பெண்களின் உலகமும் இரு முகாம்களாகப் பிரிந்துள்ளன. ஒன்று பூர்சுவா வர்க்கப் பெண்கள். மற்றயது பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்த பெண்கள். இவ்விரு முகாம்களிலுள்ள பெண்களும் "பெண் விடுதலை" என்ற ஒரே கோசத்தை முன் வைத்த போதும் அவர்களது குறிக்கோள் வெவ்வேறாக அமையும் இவ்விரு வகுப்பினரும் தம்மை அறியாது தமது வர்க்க நலன் சார்ந்தே இருப்பர் அவர்களது குறிக்கோள்கள் என்றும் வர்க்கம் சார்ந்தே இருக்கும்.

பூர்சுவாப் பெண்களின் கோரிக்கைகள்

கும் அவர்களது வர்க்க நிலைப்பாட்டினால் தற்போதைய சமுதாயத்தின் பொருளாதாரச் சமூக அமைப்புகளை அடிப்படையில் மாற்றியமைப்பதற்காகப் போராட முடியாது. அத்தகைய அடிப்படையை மாற்றியமைக்கக்கூடிய போராட்டமின்றி பெண்களின் விடுதலை என்பது முற்றுப் பெற மாட்டாது. சில சூழ்நிலைகளில் குறுகிய காலத்துக்கு எல்லாப் வர்க்கப் பெண்களதும், நோக்கம் ஒன்றாகவே அமையலாம். ஆயினும் இறுதியில் இயக்கத்தினதும், போர்முறையினதும், வழியை ஓர் வர்க்கமே தீர்மானிக்கும். இங்கு இரு வர்க்கமும் நேரடியாக வேறுபடும். முதலாளித்துவ உலகில் ஆண்களுடன் சம உரிமை பெறுவது என்பது அவ் வர்க்கங்களிற்குள்ளேயே தீர்மானிக்கப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். பாட்டாளி வர்க்கப் பெண்களைப் பொறுத்தவரையில் தொழிலாள வர்க்கத்தின் பொருளாதார அடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடி உழைக்கும் வர்க்கம் முன்னேறுவதாகும்.
எல்லா உரிமைகளையும் வாய்ப்புகளையும் தமக்கே ஆக்கி பெண்களை அடிமைத்தனையிலும், கடமைகளிலும் மாட்டிவிட்ட எதிரிகளாகவே பூர்சுவாப் பெண்கள் ஆண்களைப் பார்ப்பர்.

ஆனால் பாட்டாளி வர்க்கப் பெண்கள் பிரச்சினையை வேறு விதமாக அணுகுவர். அவர்கள் ஆண்களை எதிரிகளாகவோ ஒடுக்குபவர்களாகவோ பார்க்க மாட்டார்கள். மாறாக ஆண்களைத் தமது தோழர்களாகவும், நாள் தோறும் சுரண்டுபவர்களாகவும் அவர்களோடு இணைந்து நல்லதோர் எதிர் காலத்தை நோக்கிப் போரிட வேண்டியவர்களாகவும் கருதுவர். ஒரே சமூகச் சூழலில் அடிமைப்பட்டவர்களாகவே இப் பெண்கள் தம் தோழர்களைக் கருதுவர். வாழ்க்கையில் வசந்தத்தை எட்ட விடாது முதலாளித்துவ சங்கிலியால் பூட்டப்பட்டுள்ளவர்களாகவே கருதுவர்.

பல விடயங்களில் இன்றைய சமுதாய அமைப்பு இரண்டு மடங்கு பொறுப்பைப் பெண்களில் சுமத்தியுள்ளது. அதே வேளை கூலி உழைப்பின் சில சூழல்கள் உழைக்கும் பெண்களை ஆண்களின் எதிரிகளாக, அவர்களுடன் போட்டியிடுபவர்களாக ஆக்கியுள்ளது. என்பதும் உண்மையே. ஆயினும் இத்தகைய வாய்ப்பற்ற சூ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையான எதிரியை இனம் கண்டு கொள்கின்றனர்.

பாட்டாளி வர்க்கப் பெண் தொழிலாளியானவள் தன் சக தோழர் கருதுவது போலவே, முதலாளித்துவ அரக்கரை வெறுக்கிறாள்.பல கோடி மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுப்பதே இவ்வரக்கர்களின் தொழிலாகும். இவன் ஆண் பெண் என்ற பேதமின்றி அனைவரது உழைப்பையும் உறிஞ்சுவதைப் பெண்ணினம் அறிகிறது. இத்தகைய பயங்கரமே தொழிலாளர்களையும் ஒன்று படுத்துகிறது.

பூர்சுவாப் பெண்களின் உணர்வுகள் விசித்திரமானது. அவர்கள் பாட்டாளி வர்க்கப் பெண்களின் இதயத்தைக் கவர்வதில்லை.சுரண்டப்பட்ட மனிதர்களின் கண்களால் புத்தொளி வீசக்கூடிய எதிர் காலத்தை அவர்களால் உறுதிப்படுத்த முடிவதில்லை. இன்றைய அமைப்பிலே பாட்டாளி வர்க்கப் பெண்கள் தமது தரத்தை உயர்த்த விரும்புவதற்கில்லை என்று கூறுவதற்கில்லை.முதலாளித்துவ அமைப்பு அவர்களது வளர்ச்சியை அடியோடு தடுத்து வைத்துள்ளது. பூர்சுவாப் பெண்குலத்தவர் சமூக உழைப்புள்ள உலகத்திலேயே சமத்துவ உரிமைகளும் சுதந்திரம், பெண்ணினத்தால் அடைய முடியும் என்பதை உணர முடியாதவர்களாக உள்ளனர். இவர்கள் சட்டத்தின் மூலம் சமத்துவம் கிடைக்கப் பெற்றால் அடக்கியொடுக்கப்பட்ட இன்றைய உலகில் தமக்குரிய வாய்ப்பான இடத்தைப் பெற்று விட முடியும் என எண்ணுகின்றனர்.பெரும்பாலான பாட்டாளி வர்க்கப் பெண்களைப் பொறுத்தவரையில் ஆண்களோடு சமத்துவம் என்பது, சமத்துவம் என்ற அமைப்பை மாற்றுவதில் தாமும் சம பங்கைப் பெறுவதாகும். பூர்சுவாப் பெண்களுடைய இத்தகைய சீர்திருத்தங்கள் பூர்சுவா வர்க்க ஆண்களுக்கு மட்டுமே உரிமைகளும் வாய்ப்புகளும் என்றிருக்கும். அமைப்புக்குட்பட்ட பங்காகவே அமையும்.இவ்வமைப்பின் பூர்சுவாப் பெண்கள் பெறும் ஒவ்வொரு சுதந்திரமும் அவர்களது சகோதரிகளான பாட்டாளி வர்க்கப் பெண்களை மேலும் சுரண்டுவதாகவே அமையும். இந் நடவடிக்கையானது பெண்களின் இரு முகாம்களுக்கிடையில் உள்ள பிரிவு மேலும் விரிவடைய வழிவகுக்கும். அவர்களது நலன்கள் மேலும் கூர்மையாகி முரண்படும். இவ்வடிப்படையானது அவர்களது உணர்வுகளுடனும் மேலும் முரண்படவே செய்யும்.

ஆகவே நாம் முக்கிய பிரச்சினையொன்றை நோக்கியுள்ளோம். பொதுவாக பெண்கள் விடுதலையென ஒன்று உள்ளதா?பூர்சுவாப் பெண்களால் எழுப்பப்படும் பொதுவான பெண்கள் பிரச்சனை என ஒன்று உள்ளதா? இப்பெண்கள் ஐக்கியம் பற்றியும் ஐக்கிய உணர்வு பற்றியும் பேசுவதற்குத் தகுதியுடையவர்களா? யதார்த்த நிலையை நோக்கும் போது பாட்டாளி வர்க்கப் பெண்களுடன் ஐக்கியப்பட்டுப் போராட இப் பூர்சுவாப் பெண்கள் தகுதியற்றவர்களாகவே கருதப்படுவர்.

கவிதை-

## உடைத்து விடாதே

வேற்படை.

சாதி என்ன சாதி
நான் மனிதன் நீ மனிதன்
உன் தொழிலை நான் செய்தேன்
உழைப்பாளி ஆனேன்
உழைப்பாலே நீ சாதி
கையெடுத்து வணங்காதே
அது அடிமைப் புத்தி
வாய் திறந்து வணக்கம்
சொல் அது வர வேற்பு
கட்டி அணை கன்னத்தை
ஒற்றிக்கொள்

தோழன் நீ தோளோடு
சேர்த்துவிடு
தூரத்தே கண்டு விட்டால்
அசை துடிப்பாய் கையை
வேட்கத்துள் வாழ விரும்பாதே
காலத்தை வீணே
கழிக்காதே - ஞாலத்தைப்பார்
ஞானத்தைப் பெறு
உடைத்துவிடாதே
உழைத்துத் தேடிய
உன் ஸ்தானத்தை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரபுலகில் ஆக்கிரமிப்பு அபாயச்சங்கொலி

பி. நவரட்ணராஜா.

உலக ஏகாதிபத்தியமான தனது பாசிச வேர்களை உலகெங்கும் படரவிட்டு பயங்கர வாதப் பற்களை பதிப்பதற்கு இடம் தேடி அலைவது ஒன்றும் புதிதல்ல. சுரண்டல்களை மேற் கொள்வதிலும், ஆக்கிரமிப்பை தொடர்வதிலும் அமைதி சமாதானத்தை சீர் குலைப்பதிலும், முற்போக்கு சக்திகளை அழிப்பதிலும் அமெரிக்காவை சேர்ந்து நின்று மிஞ்சுவதினாலும் எதிர்த்து நின்று வெற்றி கொள்வதினாலும் தாம் உலக ஏகாதிபத்தியம் என்னும் கீழ்தரமான பாத்திரத்தை வகுக்க முனைய அனேக பாசிச, சியோனிச, முதலாளித்துவ சக்திகள் முயற்சிகளை மேற் கொண்டுள்ளன.




1990 ம் ஆண்டில் எண்ணெய் உற்பத்தி
(மில்லியன் தொன் அளவில்)

இதே வழியில் மேற் கூறப்பட்ட அனைத்து குணாம்சங்களையும் கொண்ட சதாம் குசைன் கூட்டம் அரபுலகில் தமது ஆக்கிரமிப்புகளை ஆரம்பித்து நகர்வது என்னும் திட்டத்தின் முதற் படியே ஈராக் குவைத்தை ஆக்கிரமித்துக் கொண்டதாகும்.

சுரண்டல்கள், ஆக்கிரமிப்பு, அமைதி, சமாதான, சீர்குலைவுகளை மேற்கொள்வதில், முற்போக்கு சக்திகளை அழிப்பதில் ...

யமும் அதன் நேச நாடுகளும், அமெரிக்காவுக்கு கை கட்டி சேவகம் செய்யும் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள கூட்டாளிகளும் தமது சக்திக்கேற்ப உலகளாவிய ரீதியில், கண்டங்கள் ரீதியில், நாடுகள் ரீதியில், மாநிலங்கள் ரீதியில், மாகாணங்கள் ரீதியில் திறம் படவே செயலாற்றி வந்துள்ளனர். (இது நமது நாட்டுக்கும், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் பொருந்தும்)

இவ்வகையில் ஈராக்கின் குவைத் ஆக்கிரமிப்பை அனுமதிப்பதன்மூலம் நீண்ட கால அடிப்படையில் உலக ஏகாதிபத்தியம் என்னும் பாத்திரத்தை ஈராக் பறித்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை. ஆகவே முளையிலே கிள்ள வேண்டும். இதைச் சாட்டாக வைத்து ஈராக் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை அத்து மீறலுக்கெதிரான நியாய யுத்தம் என்னும் முலாம் பூசி ஆக்கிரமிப்பை குவைத்தில் மேற்கொள்வதன் மூலம் அரபுலகில் முற்று முழுதான ஆக்கிரமிப்புக்கு வழிகோலி நிரந்தரச் சுரண்டல்களுக்கு வழி சமைத்தல் என்னும் பாணியில் அமெரிக்கா ஒரு கல்லில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ஆக இரு ஆக்கிரமிப்பாளர்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டியில் வாய்ச் சவடால் அடித்துக் கொண்ட சின்னமீனை பெரியமீன் விழுங்கி ஏப்பம்விட்டுக் கொண்டது

நடந்து முடிந்த யுத்தத்தில் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும், வளைகுடா, சோவியத் யூனியன் என்னும் மூன்று பகுதியினரின் லாப நட்டங்கள், வெற்றி தோல்விகள் இதில் அடங்கியுள்ளன.

வளைகுடா.

எண்ணெய் வளத்தை மூலதனமாகக் கொண்ட வளைகுடாப் பகுதி உலகின் கவனத்தில் இருப்பது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. இதில் கூடிய அக்கறையை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் கொண்டிருந்தன. இவர்களிடமுள்ள கல்வி அறிவு குறைபாட்டை சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு நட்புறவு கொண்டாடுவது போல் நடித்தும், உதவிகள் செய்வது போல் ஊடுருவியும் சவூதி அரேபியா, குவைத் போன்ற நாடுகளை அமெரிக்கா தனது கைக்குள் போட்டுக்கொண்டது.



அத்துடன் இஸ்ரேலியரை அத்துமீறிக் குடியேற்றி அரபுலகில் ஆக்கிரமிப்பை, அச்சுறுத்தல்களை மேற் கொண்டதன் மூலம் ஒரு பயமுறுத்தல் மூலமாகவும் அரபுலகை தனது ஆளுமைக்குள் கொண்டு வர அமெரிக்கா, முயன்று வந்துள்ளது.

இது இவ்வாறிருக்க அரேபியர்களுக்கிடையிலான ஒற்றுமையின்மையும், ஒருவரை ஒருவர் வெற்றி கொள்ள முனைவதும், ஒருவரை யொருவர் அமெரிக்காவுக்கு காட்டி கொடுத்து நற் பெயர் தட்டிக்கொள்ள முனைவதும்

அதீத நம்பிக்கை போன்றவை இவர்களிடத்தில் பிளவுகளை ஏற்படுத்தி வந்துள்ளன.

இந்நிலையில் அரபுலகில் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும், தனது ஏகாதிபத்திய வேசத்தை வெளிப்படுத்துவதன் மூலம் உலகில் ஒரு பயமுறுத்தலை ஏற்படுத்தவும் சதாம் குஷேன் முனைந்தார்.

இது பற்றிய திட்டத்தை அவர் முஸ்லீம் மக்கள் ஒன்றுபட வேண்டும், அமெரிக்காவும் நேச நாடுகளும் எண்ணெய் வளங்களை சுரண்டுவதை தடுக்க வேண்டும், இஸ்ரேலியர் பலஸ்தீனத்திலிருந்து விரட்டியடிக்கப்படவேண்டும், என்னும் பாணியில் மாற்றியமைத்து ஒரு புத்தகம் எழுதி 1980 ல் வெளியிட்டார். இதை யாருமே பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

ஈராக்குக்கும் ஈரானுக்கும் எட்டு வருடங்களாக நடந்த யுத்தத்தில் பெற்றுக் கொண்ட யுத்த அனுபவங்களையும் வாங்கிக் கொண்ட ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு அரபுலக ஆக்கிரமிப்பின் பரிசோதனையாக குவைத் மீது ஆக்கிரமிப்பை மேற் கொண்டார்.

குவைத் முன்பு ஈராக்கின் பகுதி என்றும், குவைத் ஈராக்கிலுள்ள எண்ணெய் வயல்களை திருடியது என்றும் அர்த்தமற்றவைகளைக் கூறி குவைத்துக்குள் படைகளை ஏவிவிட்ட சதாம் குஷேன் தனது நீண்ட கால திட்டத்தில் யுத்த தந்திரக்கணிப்புகளில் கோட்டை விட்டுள்ளார். என்பதையே அவரது தோல்வி காட்டுகிறது.

ஆக்கிரமிப்புகள், சுரண்டல்களை மேற்கொள்ள எல்லோரும் முனையலாம், சாதாரண வியாபாரியாக மக்களைச் சுரண்ட எத்தனையோ பேர் முனைகின்றனர்; இதில் எத்தனை பேர் வெற்றியடைகின்றனர் என்பது கேள்விக்குறியே. சாதாரண வியாபாரி முதல் அமெரிக்கா ஏகாதிபத்தியம் வரை சுரண்டல்களை, ஆக்கிரமிப்புகளை மேற்கொள்ள முனைந்தாலும் அந்தக் கேவலமான வேலைக்குக் கூட விவேகம் தேவைப்படுகிறது.

சதாம்குஷேன் மூன்று முக்கிய காரணிகளை கணக்கில் கொள்ள தவறி விட்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜவர் கையாண்ட இவ்விரு தந்திரோ பாயங்களிலும் பெரும் பான்மையான அரபு மக்களும்,முஸ்லீம் மக்களும், சதாம் அரபுலகின் விடி வெள்ளி, முஸ்லீம் மக்க ளின் பாதுகாவலன் என திரண்டெழுந்த னர் என்பது உண்மை.

இதனால் எகிப்து,சிரியா,ஈரான்,லிபி யா,போன்ற அரபு நாடுகளும், பாகிஸ் தான்,பங்களாதேஷ், போன்ற முஸ்லீம் நாடுகளும் பெரும் சங்கடத்தில் மாட்டி க் கொண்டனர்.

நமகள் நாம் அதைப் பார்த்துக் கொ ண்டிருக்க மாட்டோம் என அறைகூவல் விடுத்தனவாயினும் நம்பத் தகுந்ததாக இல்லை.எகிப்து,சவூதி,துருக்கி ஆகியன அமெரிக்க எஜமான விசுவாசத்தை பகிரங்கமாகக் காட்டிக் கொண்டன. சிரியா அமெரிக்காவுக் கெதிராயி னும் ஈராக்குடனான தனிப்பட்ட பகை மையினால் அது இரு சார்புமற்ற நிலை யிலேயே இருந்தது. இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பதில் தாக்குதல்கள் இஸ் ரேல் மேற் கொள்ளுமாயின் தனது நோ



பலஸ்தீன விவகாரத்தில் ஜோர்டான் போன்ற நாடுகளும் .பலஸ்தீன மக்களும் சதாம் குஷேனுக்கு ஆதரவு வழங்கினரா கிலும் ஏற்கனவே இவ் விவகாரத்தில் அரபு நாடுகள் அமெரிக்காவுக்கு கட்டு ப்பட்டு நகம் நனையாமல் நத்தை பிடித் தவர்களாகையால் தமது லாபங்களின் கணக்கில் கொண்டும் எஜமான விசுவா ச அடிப்படையிலும் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை.

இஸ்ரேல் விவகாரத்தில் சதாம் மேற் கொண்ட முயற்சி அமெரிக்காவால் முறியடிக்கப்பட்டது. ஆனால் இஸ்ரேல் எதிர் தாக்குதல் மேற் கொண்டிருப்

க்கத்தின் ஒரு பகுதி நிறைவேறும் . இத னால் இன்னும் சிறிது காலம் போரை இழுத்தடிக்கலாம்,புனிதப் போர் என்று பறை சாற்றி முஸ்லீம் மக்களின் நாயக னாகலாம் என சதாம் எதிர் பார்த்து இஸ்ரேல் மீதான தாக்குதலை மேற் கொண்டார்.ஆனால் அமெரிக்காவோ தனது செல்லப்பிள்ளையான இஸ்ரேலை அமைதியாக இருக்கச் செய்து .சதாமி ன் திட்டத்தை முறியடித்து விட்டது.


எட்டு வருடங்களாக ஈரானின் யுத்தத் தில் விழிபிதுங்கிப் போயிருந்த ஈரா க்கிய மக்களை விவேகமற்ற ஆக்கிரமி ப்பின் மூலம் மீண்டும் ஒரு மனித நேய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூஷேன்றாமபமத்தி கொமமைப்பமத்தியுள்ளார்.

குவைத்திலுள்ள மக்களை கொலை செய்தும், கொள்ளையடித்தும், சொத்துக்களை, எண்ணெய் வயல்களை நாசப்படுத்தியதன் மூலம் தான் ஒரு பாசிச வேர் என்பதை மனித நேயமற்ற மக்களை, மக்கள் நலன்களை கணக்கிலெடுக்காதவர் என்பதை நிரூபித்துள்ளார்.
அரபுலகில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கெதிராக, சுரண்டல்களுக் கெதிராக அறைகூவல் விடுத்த அதே வேளைதான் ஒரு அரபுலக ஆக்கிரமிப்பாளனாக எண்ணியது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.



## அமெரிக்காவும் கூட்டாளிகளும்

உலகிலேயே எண்ணெய் மூலம் அதிக லாபம் ஈட்டிக்கொண்டவர்கள் அரபு மக்கள் என்றே எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அமெரிக்காதான் அதிக லாபம் ஈட்டிக்கொண்டது. இந்த லாபத்துக்கு முன் மூலதனமாக சவுதியையும், குவைத்தையும் கூடுதலாக அமெரிக்கா பாவித்துள்ளது.

குவைத்தில் பெரும்பாலான எண்ணெய் கம்பெனிகள் மன்னருக்கு சொந்தமானவையாகவும் ஏனையவை அரசாங்கத்துக்கு சொந்தமானவையாகவும் இருக்கின்றன. (இரண்டும் ஒன்றுதான்) இவற்றில் பெரும்பாலானவற்றில் மசகு எண்ணெய் எடுத்தல் முதல் சுத்திகரிப்பு வரை அமெரிக்க கம்பனிகளே மேற்கொள்கின்றன. இவ்வியாபாரத்தில் கூடிய பகுதி வேலைப்பங்காளனான அமெரிக்காவுக்கும் குறைந்த பகுதி மூலதனப்பங்காளனான குவைத் மன்னருக்கும் கிடைக்கிறது. இது தவிர மன்னருக்கு கிடைக்கும் பகுதியில் கிட்டும் நிகரலாபம் அமெரிக்காவிலேயே வைப்பிடப்படுகிறது. குவைத்துடனான இராணுவ ஒப்பந்தங்கள் அமெரிக்காவுடன் இருப்பதால் அமெரிக்கா ஆயுத விற்பனை மூலம் குவைத்தில் எஞ்சியுள்ள பணத்தின் ஒரு பகுதியை பெறுகிறது.

குவைத் மக்கள் மன்னரும், அமெரிக்காவும் சேர்ந்து சுரண்டுவதை கண்டு கொள்ளாமலிருக்க மக்களுக்கு ஒரு பகுதி பணத்தை மன்னர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இதில் இளைஞர்கள் விரும்பினால் மேற் படிப்பை மேற் கொள்ளலாம். இளைஞர்கள் படிக்க அமெரிக்காவுக்கே பிரயாணம் செய்கிறார்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குவைத்தை தாம் ஆக்கிரமிப்பதன் மூலம் அதைப் பொன் முட்டையிடும் வாத்தாக வளர்த்து வரும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இதில் எவ்வளவு அக்கறையெடுத்துக் கொள்வார்கள் என்பதை கவனத்தில் எடுக்கவில்லை. குவைத் அல்லாத வேறு ஒரு சிறிய அரபு நாட்டின்மீது சதாம் ஆக்கிரமிப்பை மேற்கொண்டிருந்தால் அமெரிக்கா இவ்வளவு அக்கறை எடுத்திருக்குமா என்பது கேள்விக் குறியே. ஆனால் அரபுலகில் பகிரங்க ஆக்கிரமிப்பை மேற்கொள்ள தருணம் பார்த்திருந்த அமெரிக்காவுக்கு ஈராக் எங்கு நுளைந்தாலும் அதைச் சாட்டாக பயன் படுத்த வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆனால் லாப நட்டங்களை கணக்குப் பார்க்கும் வியாபாரியான அமெரிக்காவுக்கு சவூதியை, குவைத்தை விட மற்ற நாடுகளில் சுரண்டலால் வரும் லாப வீதம் குறைவாகையால் இவ்வளவு துரித நடவடிக்கைகளில் இறங்காது காலம் எடுத்திருக்கும் என எதிர் பார்க்கலாம் ஆனால் எதிர் ஆக்கிரமிப்பு நிச்சயம் நடந்தே இருக்கும்.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் போர் தொடுத்தால் அவர்களின் பலம் எத்தகையது என்பதை கவனத்திலெடுத்திருக்க வேண்டும். தனது பலத்தை விட தனது எதிரியின் பலத்தை கணக்கிட வேண்டியது முக்கிய யுத்த தந்திரமே. மொத்த வியாபாரியிடம் சாமான் வாங்கிய சில்லறை வியாபாரி தலை கால் தெரியாது மொத்த வியாபாரியுடன் மோதிக் கொண்டு கொள்முதலும் பறிகொடுத்தது போல். மனித அச்சுறுத்தல்களான ஆயுத வியாபார விற்பன்னர்களான அமெரிக்காவிடமும் நேச நாடுகளிடமும் எண்ணெயை அவர்களிடம் விற்று விட்டு அந்தக் காசில் அவர்களிடமே ஆயுதத்தை வாங்கி அவர்கள் பலத்தை கணக்கில் கொள்ளாது யுத்தத்தை தொடங்கி தோல்வி கண்டது யுத்த தந்திரமல்ல.

உலகில் தான் மட்டுமே வல்லரசு என்று அமெரிக்கா மார் தட்டி நிற்கிறது. இதைக் தட்டிக்கேட்க சம பலவானை தேட வேண்டியுள்ள இந்நிலையில் இவர் யுத்தத்தை தொடங்கியுள்ளார். இன்றைய நிலையில் யுத்தம் என்று பார்க்கும் போது அமெரிக்காவுக்கு எதிராக ஆயுதம் விற்கவோ, இராணுவ ஆலோசனை

நிலையில் (இது நியாயமானதல்ல. இருப்பினும் இப்போதைக்கு அமெரிக்காவின் ஆணவத்தை அடக்கவாவது) ஈராக்குடன் கூட்டுச்சேரவோ பலம் வாய்ந்தவர்களாக யாரும் இல்லை என்பதை கவனத்தில் கொள்ளவில்லை.



எண்பதாம் ஆண்டில் அவரது சிந்தனையில் இத்திட்டம் இருந்த போது அமெரிக்க எதிரணி இருந்ததென்பதையும் இன்று அவர் திட்டத்தினை அமுல் படுத்த ஆரம்பித்த போது அமெரிக்கா அக்கிரமத்தின் அரக்கனாக, தனிக் காட்டு ராஜாவாக பவனி வர ஆரம்பித்துள்ளதையும் கவனத்திலெடுத்திருக்க வேண்டும்.

இவரது திட்டத்தில் இரண்டு விடயங்களை கவனத்திலெடுத்திருந்தார். அமெரிக்கா அவற்றில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டதால் அதிலும் இவர் தோல்வியைக் கண்டார்.

ஒன்று இன்று கேள்விக் குறியாகியுள்ள பலஸ்தீன மக்களுக்கு ஒரு தீர்வு வேண்டும் என்பது. இதன் மூலம் அரபுலகில் பெரும்பான்மை ஆதரவைப் பெறுவது.

இன்னொன்று இஸ்ரேலியருடனான வலிந்த யுத்தத்தை மேற் கொண்டு இஸ்ரேல் தம்மீது தாக்குதலை நடத்தினால் அது முஸ்லீம்களுக்கெதிரான போர் என்றும் அதற்கெதிரான முஸ்லீம் மக்களையும் இஸ்லாம் சமயத்தையும் காப்பாற்றும் புனித யுத்தத்தில் உலக முஸ்லீம்கள் ஒன்று பட வேண்டும் என்று ஆதரவைப் பெற்று போரைத் திசை திருப்பி விட்டு கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலைவனத்தில் வாழ்ந்த இளைஞர்களுக்கு அமெரிக்கா சொர்க்கமாக தெரிகிறது.அங்கு களியாட்டங்களில் காலத்தை கழிக்கிறார்கள்.இங்கும் அமெரிக்கா எஞ்சியுள்ள பணத்தின் ஒரு பகுதியை சுரண்டுகிறது.

இளைஞர்கள் நாட்டுக்கு திரும்பியதும் இங்கு கூடிய பெற்றோலில் குறைந்த தூரம் போகும் படகு போன்ற அமெரிக்க கார்கள் இறக்குமதி செய்கிறார்கள்.இந்த மோகம் அனைத்து குவைத்தியர்களுக்கும் பரவுகிறது. இந்த கார் விற்பனை மூலம் எஞ்சியுள்ள பணத்தின் ஒரு பகுதியை உறுஞ்சுவதோடு, குவைத்துக்கு கிடைக்கும் பங்கு பெற்றோலும் விரைவில் தீர வழிசமைக்கப்படுகிறது.

அமெரிக்கா சென்ற வந்த இளைஞர்கள் மூலமாக குவைத் மக்கள் விடுமுறையைக் கழிக்க அமெரிக்காவுக்கு படையெடுக்கிறார்கள்.இதுதவிர அமெரிக்க பெண்களை நண்பிகளாக வைத்திருக்கிறார்கள்.குடும்பமாக சென்று வரும் அரபு மக்கள் அமெரிக்காவில் தேடுவாரற்று கிடக்கும் ஆபாசப் படங்களை வாங்கி வருகிறார்கள்.



விமான நிலையத்தில் அரபு பெண்களுக்கு சுங்கப் பரிசோதனை இல்லையாதலால் அவர்களின் சூட்கேசு[illegible] கடத்தி வரும் ஆபாசப்படங்களால் கவரப்படும் இளைஞர்கள் அமரிக்காவுக்கு படையெடுக்கிறார்கள்.

இது தவிர குவைத்தின் முக்கிய கட்டிடங்கள் யாவும் அமெரிக்க கம்பெனிகளாலேயே கட்டப் பட்டுள்ளன. இவற்றின் மூலமும் அமெரிக்கா எப்படி சுரண்டிக் கொண்டுள்ளது என்பதற்கு உதாரணமாக குவைத் விமான நிலையத்தை கொள்ளலாம்.குவைத் விமான நிலையம் கட்டப்பட்ட போது எண்ணெய் இல்லாத இடமென்று பரிசோதிக்கப்பட்ட இடத்தில் பல கோடி ரூபா செலவில் அமெரிக்க கம்பனி ஒன்று விமான நிலையத்தை கட்டியது.பத்து வருடங்களுக்குள் மீண்டும் விமான நிலையத்தில் எண்ணெய் கிணறு இருப்பதாக கூறி அது இடிக்கப் பட வேண்டும் என்று அமெரிக்க நிபுணர்கள் கூறினர்.அதைப் பல கோடி ரூபா செலவில் இடிக்க அமெரிக்க கம்பெனி ஒன்று முன் வந்தது.வேறு ஓர் இடத்தில் இன்னும் நவீன மயமான பல நூறு கோடி ரூபா செலவில் புதிய விமான நிலையம் கட்ட இன்னொரு அமெரிக்க கம்பெனி முனைந்தது.இது குவைத் ரைம்ஸ் பத்திரிகையில் சாதுவாக புகைய விடப்பட்டதாயினும் வியாபாரிகளுக்குள் ஏற்பட்ட குழறுபடியால் கை கூட வில்லை.

இப்படியாக வியாபாரத்தின் ஒட்டுமொத்த லாபத்தையும் மக்களின் கல்வியறிவற்ற தன்மையை பயன்படுத்தி மன்னரைத் துணையாகக் கொண்டு சுரண்டி வந்த அமெரிக்கா யார் மூலமும் குவைத்தை இழக்க விரும்பாது.

இன்று ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கெதிராக அமெரிக்காவுடன் இணைந்து ஒப்பாரி வைக்கும் நாடுகளும்,ஐ.நா. சபையும் அமெரிக்கா கிரனிடாவை ஆக்கிரமித்த போது எங்கே போயிருந்தார்கள்.!

ஏகாதிபத்தியம் எக்காளமிடுகிறது. அதற்கு கூட்டாளிகள் சங்கூதுகிறார்கள். தட்டிக் கேட்க ஆள் இல்லா விட்டால் தம்பி சண்டப் பிரசன்னனாம்.

ஆக்கிரமிப்பையும், சுரண்டல்களையும், ஆயுத விற்பனையையும் மூலதனமாகக் கொண்டு காலத்தை ஓட்டி வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆயுத விற்பனையில் வீழ்ச்சி கண்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள மாற்றங்களும், கொர்ப்பசேவின் ஒரு தலைப்பட்சமான ஆயுதக் குறைப்பும் சமாதான நடவடிக்கைகளும் அமெரிக்காவுக்கு ஆயுத விற்பனையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மக்களை திசை திருப்பவும் புஷ் நிர்வாகத்துக்கு ஏதாவது ஏமாற்று வழிகள் தேவைப்பட்டன. கடந்த காலங்களில் கொர்ப்பசேவுடன் உறவுகளை ஏற்படுத்தியதன் மூலம், கொர்ப்பசேவின் புரொஸ்ரொரிக்கா மூலம் கிழக்கு ஐராப்பாவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் தம்மையும் ஈடு படுத்தி (ஓரளவு உண்மை) கம்யூனிசியம் செத்து விட்டது என்று மார்தட்டியதன் மூலம் காலத்தை ஓட்டிய புஷ் நிர்வாகத்துக்கு அதைத்தொடர சதாம் குஷேன் வழி வகுத்துக் கொடுத்துள்ளார்.

தனது பயங்கரவாதப் பற்களை வளைகுடாவில் ஆழப்பதித்துள்ள ஏகாதிபத்தியத்தின் வலிந்த யுத்தத்தை ஐ. நா. சபை என்ற செத்த பாம்பைக் கொண்டு நியாயப் படுத்தியுள்ள அமெரிக்க கூட்டாளிகளும் அமெரிக்காவும் இதற்கு வழி வகுத்த சதாம் குஷேனும் இதனால் ஏற்பட்டுள்ள முழு அழிவுகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த யுத்தத்தில் தனது ஆயுத விற்பனையை சுமாராக நடத்தியுள்ளதோடு, அரபுலகில் மறைமுக ஆக்கிரமிப்புகளை, சுரண்டல்களை மேற்கொண்ட அமெரிக்கா தனத வேசத்தை கலைத்து விட்டு அனுமதி (லைசென்ஸ்) பெற்ற மக்களைப் புசிக்கும் வேட்டைக்காரனாக பவனி வருகிறது.

குவைத்திலிருந்து ஈராக் விரட்டியடிக்கப்பட்டுள்ளது. ஆனால் குவைத்தினுள் மீட்டெடுப்பு என்னும் போர்வையில் ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ள அமெரிக்காவை வெளியேற்றுவது யார்?

சவூதியிலும், குவைத்திலும் படைகளை நிலை கொள்ளச் செய்வதன் மூலம் தனது அரபுலக ஆக்கிரமிப்பை விஸ்தரிப்பதோடு இஸ்ரேலின் ஆளுமையையும் அரபுலகில் ஸ்திரப்படுத்த வழி வகுக்கும். அமெரிக்காவை தட்டிக் கேட்பது யார்?

சைப்படுத்தி அவர்களின் வாழ்விடங்களை அபகரித்து அகதிகளாக, அனாதைகளாக அலைய விட்டு, அவர்களை துரத்தியடித்து அவர்களின் பாச மிகு பூமியை ஆக்கிரமிக்கும் இஸ்ரேலை ஐ. நா. சபை கண்டும் காணாமல் இருப்பதேன்?



அமெரிக்காவின் கைத்தடியாக பயன்படும் பலமில்லாத, பிரியோசன மில்லாத ஐ.நா.சபையின் மூலம் அமெரிக்கா நியாயங்கள் என்று உலகுக்கு அறிவிப்பவைகளுக்கு கையெழுத்திட ஐ. நா. செயலாளர் என்று ஒருவர் தேவையா?

ஈராக்கின் ஆக்கிரமிப்பில் நிதானமாக, தொடர்ச்சியாக சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்றால் இல்லை. ஆனால் அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டபின்பே போலிச் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐ.நா.வினதும், அமெரிக்காவினதும், கூட்டாளிகளினதும் அமைதி, சமாதானம், ஜனநாயக வழிமுறை, மக்கள் நலன்கள், மானுட நேசம் அபாரம்-அபாரம்.


சோவியத் மீதான ஒரு பரிசோதனைக்கும் அமெரிக்காவுக்கு இந்த யுத்தம் வழி வகுத்திருக்கிறது. சோவியத்துக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் நொந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தான யோசனைகள் இருபகுதியினராலும் பெரிதாக கலந்தாலோசிக்கப் படவில்லை.

தத்துவம் என்றும் சாவதில்லை. அது பிழையாக நடைமுறைப் படுத்தப்பட்டதன் விளைவுகள் இன்று அனுபவிக்கப் படுகின்றன.




கடந்த காலங்களில் சோசலிச முகாம்களுக்குள் இருந்த இராணுவ நெருக்கம் வார்சோ மூலமாக இப்போது அது இல்லை அமெரிக்காவுக்கு ஒரு பயத்தை ஏற்படுத்தியது. ஆனால் கடந்த காலங்களில் கம்யூனிசத்தின் பெயரால் நடத்தப்பட்ட நவீன சரண்டல்களால் சீரழிந்து போன சோசலிச முகாம்கள் சீரமைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இதை பெரொஸ்ரொய்க்கா மூலம் சரி செய்ய கொர்ப்பசேவ் முனைந்தார். அவரின் சிந்தனை காலத்தின் தேவை. ஆனால் கடந்த கால பிழையான தலைமைகளின் வழி நடத்தல்களால் நொந்து போன மக்கள் பெரொஸ்ரொய்க்கா மூலம் நவீன சுரண்டல் காரர்களிடமிருந்து விடுதலை பெறத் துடித்தனர்.

அதன் விளைவு அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளிகளும் ஊடுருவினார்கள். எங்கும் கிளர்ச்சிகள். நவீன சுரண்டல் காரர்கள் முதலாளித்துவத்துடன் இணைந்து விட்டார்கள். மார்க்சிசம் செத்து விட்டதாக பறை சாற்றப்படுகிறது.

அன்று ஜார் மன்னரின் ஆட்சிக்கெதிராக மக்கள் புரட்சி செய்தார்கள். இன்று கம்யூனிசத்தை பிழையாக வழி நடத்தியவர்களுக்கெதிராக மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இதனால் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கூட்டாளிகளும் கொக்கரித்துக்கொண்டு மேற்கொள்ளப் போகும் ஆக்கிரமிப்புகளும், அடாவடித்தனங்களும், அடக்கு, ஒடுக்கு முறைகளும் மக்களை ஒரு நாள் கிளர்ந்தெள வைக்கும். புரட்சி வெடிக்கும்.

அன்று தத்துவம் மீண்டும் புரட்சிக்கு கை கொடுக்கும். மக்கள் என்றும் விழிப்புடன்தான் இருக்கிறார்கள்.

என்றோ நடக்கப் போகும் செழுமையான புரட்சிக்கு அடி கோலும் நிகழ்ச்சியே அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியல் தீர்வா? இராணுவ தீர்வா?

புத்திரன்.

ஸ்ரீலங்கா தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தினை நசுக்கி, ஒடுக்கி பலவீனப்படுத்த அல்லது அழித்து விட ஸ்ரீலங்கா பேரினவாத அரசு பல வழிகளிலும் முயன்று வந்துள்ளது. இதில் இன்றைய கால கட்டத்தில் ஸ்ரீலங்கா அரசு, தமிழ் முஸ்லீம் அரசியல்கட்சிகள், புலிகள் என்று மூன்று பிரிவிலிருந்தும் இப்பிரச்சனைக்குப் தீர்வு பற்றி எப்படிப் பார்க்கப் படுகிறது என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஸ்ரீலங்கா சிங்கள ஆளும் வர்க்கங்களைப் பொறுத்த வரையில் இனப்பிரச்சனைக்குப் எண்ணெய் வார்த்து எரிய விட்டுக் கொண்டிருப்பதன் மூலமே ஆட்சிகளை சிரமமின்றி நடாத்தி செல்லலாம். பொருளாதார சுமைகளால் முதுகு வளைத்து போயுள்ள சிங்கள மக்களை இனப் பிரச்சனைக்குள் இழுத்து விடுவதன் மூலம் அவர்கள் சுமைகளை தாங்க முடியாது எழுச்சி கொள்வதை தடுத்து நிறுத்தலாம் என எப்போதும் நம்பி வந்துள்ளதோடு செயற் பட்டும் வந்துள்ளன.

இனப் பிரச்சனை பூதகரமாக வெடித்து தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக பர்ணமித்த போது ஆட்சியிலிருந்த, இன்று வரை ஆட்சியிலிருக்கும் ஸ்ரீலங்கா சிங்கள பெளத்த பேரின வாத அரசான யு.என்.பி. அரசுக்கு தமிழ் பேசும் மக்களை அழித்ததில், போராட்டத்தை பலவீனப்படுத்தியதில் பெரும் பங்குண்டு.

இவ்வரசு தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை அரசியல்தீர்வு மூலம் தீர்த்துக் கொள்ள, தமிழ் பேசும் மக்கள் ஸ்ரீலங்காவில் சுதந்திரமான மனிதர்களாக வாழ விட என்றுமே விரும்பியதில்லை. மாறாக இனக்கலவரங்களை தூண்டி விடுவதிலும், வன்முறைகளை பாவிப்பதிலும் முஸ்லீம், தமிழ் கலவரங்களை தூண்டிவிட்டு பிரித்தாளும் தந்திரங்களை கையாள்வதிலும் இராணுவ அடக்கு முறையை

சங்களில் இராணுவ ஆட்சியை நடத்த, ஒரு இராணுவ தீர்வை ஏற்படுத்தவே முனைந்திருக்கிறது.

இனப் பிரச்சனையை இழுத்தடிப்பதன் மூலம் ஆட்சியை தொடர்வதற்கு வேண்டி சில அரசியல் தீர்வுகளை முன் மொழிய முற்பட்டாலும் மறு புறத்தில் அவற்றைக் குழப்பும் வேலைகளை தூண்டிவிடுவதோடு தாம் முன்மொழியும் அரசியல்தீர்வுக்கான வழி கோல்களையோ, அன்றித் திறவு கோல்களையும் மனமுவந்து ஒத்துழைப்புக் கொடுக்காது இழுத்தடிப்பதும் பின்பு எதிர் கட்சிகளின் நெருக்கடிகளால் அல்லது தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சிகளின் குழப்பல்களால் அத்தீர்வு வழி முறைகள் அமிழ்ந்தோ அன்றி இல்லாதோ போய் விடும்.

பின்பு மீண்டும் இராணுவ வழி முறைகள் கையாளப்படும். தமிழ் பேசும் மக்கள் அழிக்கப் படுவார்கள், பிரதேசங்கள் சின்னா பின்னப் படுத்தப்படும். ஆயுத முனையில் தமிழ் பேசும் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவர்.

இது தவிர இலங்கை அரசுக்கு தமிழ் பேசும் மக்களும் ஸ்ரீலங்காவில் சுதந்திர மனிதர்களாக பெரும் பான்மை மக்கள் பெறும் அனைத்து உரிமைகளும் பெற்று வாழ வழிவகைகளை வகுக்க எண்ணங்கள் இருப்பதாக தெரியவில்லை. தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை தீர்க்கப் படும் பட்சத்தில் சிங்களமக்கள் வேலையில்லாத் திண்டாட்டம், பசி, பட்டினி பொருளாதார நெருக்கடிகளால் அரசுக்கெதிராக திரும்புவர். இதனால் அங்கு இவர்களால் ஆட்சி நடத்தமுடியாது. முற்போக்கு சக்திகள் வளர்ச்சி அடைய வாய்ப்புண்டு. ஆகவே இன வெறி கூட்டத்தை தம்பக்கம் வைத்துக்கொண்டு அடக்கு முறை கொண்ட இராணுவத் தீர்வை இலங்கையரசு தமிழ் பேசும் மக்களின் பிர்ச்சனைக்கு தீர்வாக தமது நன்மை கருதி நடைமுறைப் படுத்தி வருகிறது.

இது தொடர்பாக எதிர்கட்சிகளிடத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதுவும் இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. எதிர்க்கட்சிகளில் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்போர் எத்தனை பேர் என்பதும், அப்படி யாராவது அங்கீகரிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு சிங்கள மக்கள் ஆதரவு எப்படி என்பதெல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆளும்கட்சிக்கு அடுத்தபடியாக வைத்தெண்ணப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உட்கட்சி குத்துவெட்டுகளும், தமிழ்பேசும் மக்கள் பிரச்சனையில் ஒரே குழறுபடிகளுமே காணப்படுகின்றன. இபோதைக்கு யு. என். பி. ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டும் என்பதற்காக யாராவது சுதந்திரக்கட்சியுடன் இணைந்து செயலாற்ற முடியுமே தவிர, சுதந்திரக்கட்சியும் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவோ அன்றி அதுபற்றி சிங்களமக்களிடம் பகிரங்கமாக பேசவோ தயாராய், தைரியமாய் இல்லை.

இதை வைத்தே யு. என் பி. ஆட்சியை மீண்டும் கைப்பற்றி விடும் என்ற பயமே இதற்கு காரணம். சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பெரிதாக எதையும் தீர்த்து விடும் என்று எதிர் பார்க்க முடியாது.

மறுபுறத்தில் தமிழ் பேசும் மக்களின் தமிழ், முஸ்லீம் அரசியல் கட்சிகளின் பங்கும் இங்கு முக்கியமானது.

தமிழ்பேசும் மக்களின் நலனில் உண்மையான அக்கறையும் நேர்மையான அரசியல் நடவடிக்கைகளும், கட்சிகளுக்கிடையிலான ஐக்கியமும் குறைபாடாகக் காணப்படுவதானது, எமது பக்கத்திலிருந்து இனப்பிரச்சனையின் தீர்வுக்கு ஒரு ஆயுதப் போராட்ட, அரசியல் நெருக்கடியை கொடுக்க முடியாமல் போனதோடு இலங்கை அரசுக்கு எமது பிரச்சனைக்கு எம்மையே குற்றம் சாட்டிக் கொண்டு காலத்தை ஓட்டிக்கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்ற கசப்பான உண்மையை நாம் ஜீரணித்துத் தான் ஆக வேண்டும்.

ஆயுத அராஜகம் கொண்ட புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் இயக்கங்களுக்கிடையிலான ஐக்கியமின்மை போன்ற காரண[illegible]

போராட்டம் பலவீனமடைந்து போனதோடு, மக்களுக்கும் இயக்கங்கள், போராட்டங்கள் மீதான வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தமிழ்பேசும் மக்களை அரசியல் அனாதைகளாக, அநாதரவற்ற நிலையில் தலைமைத்துவம் இல்லாதவர்களாக அரசின் பாசிசப் பிடிக்குள் சிக்கவிடுவதா?

அல்லது இருக்கும் நிலைக்கேற்ப மக்கள் நலனை மனதில் கொண்டு கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி அரசுக்கு நெருக்கடிகளை கொடுப்பதா?

என்பதுகளில் ஆயுதப் போராட்டம் தோற்றுவிக்கப் பட்ட காலகட்டத்தில் இருந்த அகப்புறச் சூழ்நிலைகள் இன்று இல்லையென்பதும், உலகில் ஏற்பட்டு வரும் அரசியல் சூழ்நிலைகளுக் கேற்ப நமது போராட்டத்தை வெற்றிப் படியை நோக்கி நகர்த்துவதே விஞ்ஞான பூர்வமான வழிமுறையாக இருக்க முடியும்.

ஆயுதப் போராட்டமும் இயக்கங்களும் புலிகளால் தனித்துவ ஆளுமை என்னும் குறுகிய நோக்கில் பலவீனப்படுத்தப் பட்டதால் இலங்கை அரசின் கைஓங்கி இயக்கங்களின் அபிப்பிராயமின்றி இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு மாகாணசபை அறிமுகப்படுத்தப்பட்டது.

இம்மாகாணசபை திட்டத்தை இலங்கை அரசு வெறும் பூச்சாண்டியாகவே காட்டிக் கொண்டது. ஆயுதப் போராட்டம் பலவீனப்பட்ட நிலையில் தமிழ்பேசும் மக்களுக்கு கிடைத்த சந்தர்ப்பம்இது.

இந்நிலையில் இப்பூச்சாண்டியையே ஒரு அரசியல் வடிவமாக்கி இன்று தமிழ்பேசும் மக்கள் இதனூடு தமது போராட்டப் பாதையை வளர்த்துக் கொள்ள வழி சமைக்கப் பட்டுள்ளதோடு இலங்கை அரசின் முகத்தில் கரிபூசப் பட்டுள்ளது.

இம் மாகாணசபை என்னும் அரசியல் வடிவத்தை தூர நோக்கின்றி மேலெழுந்த வாரியாக விமர்சித்தவர்கள், நிர்ாகரித்தவர்கள், தமிழ்பேசும் மக்களுக்கு சிறந்த தலைமைத்துவம் வழங்க [illegible]ற்ற கையாலாகாதவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எலோருமே இன்று மாகாண அரசின் அதிகாரங்கள் கொடுக்கப் படவேண்டும், தேர்தல் அல்லது இடைக்கால நிர்வாகம் மாகாண அரசுக்கு ஏற்படுத்தப் படவேண்டும் என்றெல்லாம் குரல் கொடுக்கின்றனர்.

இந்த அரசியல் வடிவம் தோற்றுவிக்க பட்டபோது இருந்த நெருக்கடிகளும், திட்டமிட்டரீதியிலான ஒத்துழைப்பு மறுப்புகளும், புலிகளின் அராஜகமும் இருந்தமையால் நிர்வாக முறையில் பல பிழைகள் ஏற்பட்டுள்ள போதிலும் இதை நிராகரித்தவர்களே இன்று இதைப் பற்றி பேச முற்பட்டுள்ளதானது இந்த அரசியல் வடிவத்துக்கு கிடைத்துள்ள பெரும் அரசியல் வெற்றியாகும்.

இது தவிர்ந்த வேறெந்த அரசியல் தீர்வும் இதுவரை யாராலும் சிறப்பாக முன்வைக்கப்படவில்லையாதலால் இன்று தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்கான அரசியல் திறவு கோல் அதிகாரங்களுடன்கூடிய மாகாணசபையே.

அதிகாரங்களுடன் கூடிய மாகாணசபையை அரசியல் திறவுகோலாக்குவதை கூட்டணி, காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ஈ.என்.டி.எல்.எப், முஸ்லீம் காங்கிரஸ், முஸ்லீம் லீக், முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி, ரெலோ, ஈ.பி.டி.பி, ஈரோஸ் ஆகிய கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஆனால் இலங்கையரசு பிரித்தாளும் தந்திரோபாயத்தை பாவித்து இக்கட்சிகளை கூறு கூறாக்கியுள்ளதும், இதை இக்கட்சிகள் புரிந்து கொள்ளாமலோ அன்றி புரிந்து கொண்டாலும் மக்கள் நலனைவிட தமது நலனை முதன்மைப் படுத்தியுள்ளது இங்கு வேதனைக்குரிய விடயமாகும்.

ஈ.பி.டி.பி, முஸ்லீம் லீக் ஆகியன இலங்கை அரசின் செல்லப் பிள்ளைகளாக செயல்பட்டு அரசியல் தீர்வுக்கான அரசுக்கெதிரான நெருக்கடியில் முட்டுக் கட்டையாக இருப்பதும், ரெலோ, புளொட் போன்றவை இலங்கை அரசுடனும், தமிழ் கட்சிகளுடனும் என்று இரட்டை முகம் காண்பிப்பதால் அரசியல் தீர்வில் தொய்வு அல்லது பலவீனம் ஏற்படுவதும்

மக்கள் நலனும், நேர்மையான அரசியலும் முற் போக்கு சக்திகளுக்கே உண்டென்பதை பல தடவைகள் உலகில் பல பாடங்கள் எங்களுக்கு உணர்த்தி நிற்கின்றன. இப்பாடம் இன்று இலங்கையிலும் எங்களுக்கு புகட்டப் பட்டுள்ளது.

முற்போக்கு சக்திகளுக் கெதிராக எதிர்புரட்சிகர சக்திகள் எவ்வளவு சேறடிப்புகளை மேற்கொண்டாலும் காலப் போக்கில் அவர்களை மக்கள் இனங்கண்டு கொள்வர் என்பது உண்மை.

இன்னொருபுறம் புலிகளின் நிலையும் முக்கியமானதாகும். தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு ஒரு இராணுவத் தீர்வையோ, அரசியல் தீர்வையோ முன்வைக்காது புலிகளின் அதிகாரத்துக்குள் தமிழ் பேசும் மக்கள் அல்லல்படவேண்டும் என்னும் சுயநல குறுகிய நோக்கில் ஆயுதம் கொண்டு மக்களை நேரடி ஒடுக்கு முறைக்குள்ளாக்கிவரும், போராட்டத்தை பலவீனப்படுத்திவரும் ஒரு பாஸிசக் கும்பலே புலிகளாகும்.

இவர்கள் தமிழீழம் என்னும் வெற்றுப்பானையை கோஷமாக்கிக்கொண்டு சுரண்டலை மேற்கொண்டுவரும், போராட்டத்தை பலவீனப்படுத்த அரசுக்கு பலவழிகளில் உதவி புரியும் அரசியல் வறுமையாளர்களாகும்.

இவர்கள் தமது நலன் வேண்டி அரசுடன் பேச்சுவாத்தைகள் என்று இழுத்தடிப்பதை தந்திரோபாயம் என்றும் பின்பு தமது நலன்களுக்காக ஆயுத நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதை வீரமிகு மண் மீட்புப் போராட்டம் என்று பறையடிப்பதும் இதனால் பல மக்கள், குழப்பல்வாதிகள், இவர்கள் நடவடிக்டிகைகளில் தம்லாபத்தை ஈட்டிக்கொள்ளும் சந்தர்ப்பவாதிகள் இவர்களை தேசிய சக்திகளாக நம்புவதும், திட்டமிட்டு சித்தரிப்பதும் இங்கு கவனத்திலெடுக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

ஆயுதப்போராட்டம் பலவீனப்பட்டுள்ள தோடு அகப் புறச் சூழ்நிலைகளும் திருப்திகரமாக இல்லாத இந் நிலையில் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் அரசியல் தீர்வாக வழிவகுத்துள்ள மாகாண சபை என்னும் அரசியல் வடிவம் வெற்றி

தமிழ்த்தேசிய ஆவணச்சுவடிகள்

www.tamilarangam.net

# கலங்கும் கழக கண்மணிகள்.

நேசன்

இந்திய ஆளும் வர்க்க பிரதிநிதிகளுக்
கிடையில் அவ்வப் போது ஏற்படும் உள்
முரண்பாடுகள், குத்து வெட்டுக்கள், பழி
வாங்கல்கள், ஆட்சிக்கலைப்புக்கள், எல்
லாம் இந்தியாவைப் பொறுத்த வரையி
ல் சர்வ சாதாரண விடயமாகும்.

இதன் அடிப்படையில்=
தமிழ் நாட்டின் சட்டம், ஒழுங்கு, பாது
காப்பு போன்ற விடயங்களை மீறும்
வகையில் தமிழக அரசு செயல்பட்டது
என்ற காரணம் காட்டி தி. மு. க. வின்
ஆட்சி கலைக்கப்பட்டுள்ளது.

சிறுபாண்மையான பாராளுமன்ற உறுப்
பினர்களின் எண்ணிக்கையை வைத்துக்
கொண்டு காங்கிரஷின் தயவில் ஆட்சி
அமைத்திருக்கும் திருவாளர் சந்திர
சேகரின் தலைமையிலான மத்திய அர
சின் தூண்டுதலின் பேரில் ஜனாதிபதி
யினால் கலைக்கப்பட்டிருக்கும் சட்ட ச
பையின் விவகாரம் தமிழக மக்கள் மத்
தியில் உணர்வு ரீதியான தாக்கத்தை
ஏற்படுத்தியுள்ளன.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பா
சறையில் வளர்ந்தவர்கள் என தம்மைத்
தாமே தம்பட்டமடித்துக் கொண்ட கழ
கக் கண்மணிகள், சட்ட சபை கலைப்பை
எதிர்ப்பதற்கு மக்களின் உணர்வலைக
லைப் பாவித்து தீக்குளிப்பு வரைக்கும்
அவர்களின் போராட்டம் முன்னெடுக்கப்
பட்டது.

தமிழக அரசு கலைக்கப் பட்டு விட்டது
என்ற உணர்வுகள் மக்கள் மத்தியில் இரு
ந்தாலும் மறுபுறமாக தி. மு. க. ஆட்சிக்
காலத்தினில் கழகக் கண்மணிகளினா
ல் மக்களுக்கு ஏற்பட்ட சௌகரியங்க
ளையும் மறக்க முடியாத உண்மைகளாக
மறுபுறமாக உள்ளன.

ஆட்சி நிர்வாகத்தினில் கழகக் கண்ம
ணிகளின் தான்தோன்றித் தன்மான
தலையீடுகளும் அதன் விளைவாக உழைக்
கும் மக்கள் பாதிக்கப்பட்டதும், கருணா
நிதி தனது அரசியல், சினிமா விரோ
திகளை திட்டமிட்ட ரீதியாக பழி

வாங்கியதும் கிராமப்புறங்களில் ஒடு
க்கப்படும் மக்களை ஆட்டிப்படைக்கும்
பண்ணையாளர்களும் அதன் அடியாட்களு
மே கழகக் கண்மணிகளாக இருந்து ஆ
ட்சிபுரிந்து வந்ததுடன் எல்லாவற்றையு
ம் மிஞ்சும் வகையில் தமிழ் நாட்டில்
தமிழக மக்களுக்கே பாதுகாப்பு இல்
லை என்ற நிலைக்கு போலீஸ் படையை
தங்களது அரசியல் நலன்களுக்காக சுத
ந்திரமாக செயல்பட விடாமல் கட்டு
ப்பாட்டில் வைத்திருந்ததையும் மக்கள்
இலகுவில் மறந்து விடமுடியாத விடய
ங்களாக மறுபுறமாக இருக்கின்றன.



இலங்கைத் தமிழ் பேசும் மக்களின்
நலன்களுக்கு விரோதமான முறையில்
தங்களது நலன்களுக்காக இயக்கங்களை
ப் பாவித்ததையும் காலத்துக்கு காலம்
ஈழஸ்ரண்ட் அடித்ததையும், தமிழக கடல்
தொழிலாளர்கள் தமிழீழ கடல் (?) எல்
லைக்குள் பிரவேசித்து மீன் பிடித்தார்
கள் என்ற வேடிக்கையான காரணம் கா
ட்டி நூற்றுக்கணக்கானவர்களை புலிகள்
இலங்கை கடற் படையினரின் ஒத்துழைப்
புடன் யாழ்ப்பாணத்திற்கு கடத்திக்
கொண்டு செல்லப்பட்ட வேளையில் தி
ருவாளர் கருணாநிதி கையாண்ட
அணுகு முறைகள் தமிழக பிரஜைகளை
அதிர்ச்சிக்குள்ளாக்குவதாகவும் அவ
மானப்படுத்துவதாகவும் இருந்தது.

விடுதலை இயக்கங்களுக் கிடையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோதலை தவிர்ப்பதற்காக செயல்பட வேண்டியவர்களே இயக்கங்களுக்கிடையில் முரண்பாடுகளை மேலும் வளர்த்தும், தமிழகத்திலேயே தலைவர்களை படுகொலை செய்யப்படுவதற்கு சகல விதமான ஒத்துழைப்பையும் வழங்கி இரத்தக் களரியை ஏற்படுத்தி தமிழகமே நடு நடுங்கும் வகையில் நடந்து கொண்டதுடன் தமிழ் பேசும் மக்களுக்கு எப்போதுமே பக்க பலமாக இருக்க வேண்டிய தமிழக மக்களை அந்நியப்படுத்தும் நடவடிக்கையாகவுமே அமைந்தன.

தமிழ் நாட்டின் எல்லைக் கரையோரங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கிறது என்ற பயப் பீதியை உருவாக்கி புலிகள் தமது கடத்தல் தொழில்களை தடங்கல் இன்றி செய்வதற்கு வழிசமைத்துக் கொடுத்ததுடன், தமிழ் நாடு இந்தியாவின் ஒரு பகுதி என்ற எண்ணமே இல்லாது இலங்கைத் தீவின் ஒரு பகுதி என்ற அடிப்படையில் இந்திய மக்களையும், இந்திய தேசத்தையும் இழிவுபடுத்தும் வகையில் செயல்பட்டார்கள்

ஏகாதிபத்திய நலன்களுக்காக இந்தியாவை துண்டாட நினைக்கும் இந்திய மத வெறியர்களும், மொழி வெறியர்களும் சுதந்திரமாக பாசறை அமைப்பதற்கும், பயிற்சிகள் பெறுவதற்கும், தமது பிற்போக்கு கூட்டாளிகளுடன் திட்டங்கள் போடுவதிற்கும், உரிய தளமாக தமிழகம் பாவிக்கப்படுவதிற்கான சாதகமான சூழ்நிலைகளை, போலீஸ் படையை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்ததினூடாக ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

இதைவிட இன்னுமொரு படி மேலே போய் புலிகளிடம் கழகக் கண்மணிகள் சிலர் ஆயுதப் பயிற்சி பெறவும் தி. மு. வீரமணி, நெடுமாறன் போன்ற ஏகாதிபத்திய நலன்களுக்காக தேசிய வெறியர்கள் ஆயுதப்பயிற்சிகளைப் பெறவும், தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்களை அமைத்து இயங்குவதற்கு எந்த வித தடையுமின்றி செயல் பட்டனர்.

தி.மு.கழகம் எதிர் காலத்தினில் தேர்தல் மூலமாக ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலைகள் உருவாகும் வேளையில் கருணாநிதியின் அடுத்த வாரிசான ஸ்டாலின் மூலமாக ஒரு வன்முறை போராட்டத்தினை ஏற்படுத்துவது போன்ற

களின் அடிப்படையிலேயே தமிழ் நாட்டில் புலிகளைத் தமக்கும் பாவித்தும் இதற்குப் பிரதி உபகாரமாக தமிழ் நாட்டில் புலிகள் தான் தோன்றித்தனமாக நடந்து கொண்டவைகளை கண்டுங் காணாது மௌனம் சாதித்ததும் ஆட்சிக் கலைப்புக்கு, தி.மு.கழகத்தின் எதிர்ப்பாளர்களுக்கு கிடைத்த சாதகமான காரணிகளாகும்.

திருவாளர் சந்திர சேகர் தமது பதவி ஆசையின் காரணமாக காங்கிரஷ் வற்புறுத்தும் அனைத்தையும் நடை முறைப் படுத்த வேண்டியவராக இருந்தாலும், சந்திர சேகர் பதவி ஏற்பதற்கு எதிராக வி.பி.சிங்கிற்கு தளபதியாக நின்றதாலும், மத்திய அரசின் உத்தரவு ஆட்சிக் கலைப்புக்கு பழிவாங்கல் காரணமாகும்.




தமிழ் நாட்டு மக்களின் இன்றைய தலைவிதியை தீர்மானிப்பவராக கருதப்படும் செல்வி. ஜெயலலிதாவின் அ.அ.தி.மு. கழகமும் ஆட்சிக் கலைப்புக்கு தூபமிட்டவர்களில் மற்றொரு முக்கியமானவராகும், இவருடைய அக்கறையும் மக்களின் நலன்களின் அடிப்படையாகாது, அல்லது மாறாக இவருடைய இலட்சியக் கனவான் முதல்வர் பதவி இதனூடாக கிட்டும்; என்பது தான்.

இவ் ஆட்சிக் கலைப்பு விடயத்தினில் முரண்பட்ட தமிழக ஆளுனர் பர்லானா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார், தமிழக அரசு கலைக்கப்படுவதிற்கு ஜனாதிபதி எடுத்துக் கொண்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ் ஆளும் வர்க்க தலைமைகளுக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் குத்து வெட்டுக்கள் இந்திய வரலாற்றுக்கு ஒன்றும் புதிய விடயமுமல்ல என்பதுடன், அது மக்களின் நலன்களின் அடிப்படையானதுமல்ல.



இவ் ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்புச் சட்டமானது மாற்றி அமைக்கப்படாத வரைக்கும் இவ்வகையான நிகழ்வுகள் நிகழ்வதும், ஏகாதிபத்தியம் இதைப் பாவித்து தனது நலன்களுக்காக மதவெறியாளர்களையும், மொழி வெறியர்களையும் பயன் படுத்துவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

ஆகவே இந்திய தேசிய இனங்களின் உண்மையான விடுதலைக்காகவும், உழைக்கும் வர்க்கத்தின் நலனுக்காகவும் போராடக் கூடிய முற்போக்கு புரட்சிகர இடதுசாரி சக்திகள் ஈழ விடுதலையை பாடமாக கொண்டு இவ் வகையான தேசிய அலைகளுக்குள் சிக்கி மோதி விடாது மிகவும் நிதானத்துடன் தெளிவான பாதையில் முன்னேறுவதினூடாகவே இந்திய மக்களினுடைய இந்திய தேசத்தினுடைய முழுமையான விடுதலையையும், இந்து சமுத்திர பிராந்தியத்தினுடைய அமைதியையும் பேண முடியும்.

32 ம் பக்க தொடர்ச்சி-----

சிங்கள உழைக்கும் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும் பலர் ஆயிரக்கணக்கில் காணாமல் போயுள்ளதும் தென்னிலங்கையில் மக்களின் கண்ணீருக்கான காரணங்கள்.

மறுபுறமாக ஒண்டரை தசாப்த காலமாக மேற் கொண்டு வரும் இன அழிப்பு நடவடிக்கையும் நிலஆக்கிரமிப்பும் இச் சிறுபாண்மை தேசிய இனத்தின் உரிமைகளை வழங்க மறுக்கும் சியோனிச வாதப் போக்கும் இத் தரகு முதலாளித்துவ யூ.என்.பி. அரசுக்கெதிரான நாடளாவிய ரீதியில் போராட வேண்டிய தேவையை எமக்கு உணர்த்தியுள்ளது.

தமிழ் மக்களின் துயரங்களை சிங்கள உழைக்கும் மக்கள் உணர்வதும் சிங்கள உழைக்கும் மக்களை தனது ஜனநாயக மறுப்பு சர்வாதிகார ஆட்சியினூடாக அடக்கி ஆளநினைப்பதை தமிழ் பேசும் மக்கள் உணர்வதும் இன்றைய தேவையாக உள்ளது. அதனூடாகவே பேரினவாத அரசுக்கெதிரான உயர்ந்த கட்ட போராட்டத்தை நடத்த முடியும்.

இன, மத மொழிகளுக்கப்பால் பட்டு அகில இலங்கை ரீதியில் செயல்ப்பட வளர்ச்சி கண்டுள்ள 'அன்னையர் முன்னணி' ஆனது எந்த விதமான கட்சி நலன்களுக்கப்பால் மக்களின் நலனில் அடிப்படையில் அதை ஒரு வெகுஜன ஸ்தாபனமாக கட்டியெழுப்புவதும், முன்னோக்கிய பாதைக்கு முன்னெடுத்து செல்வதும் ஜனநாயக உள்ளம் படைத்த முற்போக்கு சக்திகளின் வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக சிங்கள உழைக்கும் மக்கள் போராடுவதும் சிங்கள மக்களின் விடுதலைக்காக ஒடுக்கப்படும் தமிழ் பேசும் இனம் குரல் கொடுப்பதும், ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது என்பதையே 'அன்னையர் முன்னணி'யின் அங்குராப்பணக் கூட்டமும் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் எண்ணங்களும், அபிலாஷைகளும் நிரூபித்து நிற்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுருதி பேதம்

குறுநாவல்

அக்கினி

என்ரை ஐயோ, என்ரை ஐயோ என்னை பெத்தவளே! என்னை விட்டிட்டு போயிட்டியோ.என்ரை பெத்த வயிறு பத்தி எரியுதடி. உன்னை மார்மேலும் தோள் மேலும் போட்டு வளர்த்தேனே. நான் குத்துக் கல்லாட்டம் இருக்க வாழவேண்டிய வயதில் நீ வழிதவறிய மாயமென்ன? என்ரை ஐயோ என்ரைஐயோ

என்று நெஞ்சில் அடித்து குழறிப் புலம்பிக் கொண்டிருந்தாள் சிவகாமி. ஊனுள் உருகும் தாய்மை உணர்வுகள் கண்ணீராய் வார்த்தைகளாய் வெளியேறிக் கொண்டிருந்தன.

அக்கம் பக்கத்தவர்,உறவினர்கள், இரத்த உருத்துக்கள் எல்லோரும் பரபரப்புடன் காணப்பட்டனர்.ஒரு சிலரின் முகத்தில் கவலை ரேகைகள், ஒருசிலர் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தனர். வயது போன பாட்டிகள் சிலர் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தனர்.

சுருதி என்னோடு வாழ்ந்த காலத்தில் எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கியிருந்தாள்.

சுருதி எனது மகள்.ஆனால் அவள் எனக்கு தந்தை என்பதுதான் பொருந்தும்.அநேக விடயங்களில் ஆசானாக, இப்படித்தான் வாழவேண்டும் என்று வழிகாட்டியாக வாழ்ந்து காட்டியிருந்தாள். அவள் என்னுடன் இருந்த போது அதை என்னால் உணர்ந்து கொள்ளமுடியவில்லை.

செல்லையா வாத்தியார் என்று அனைவராலும் மதிப்புடன் அழைக்கப்படும் நான் ஒரு இரட்டை மனிதன். இநதச் சமூகத்தின் வரட்டு கௌரவங்களை, மூட நம்பிக்கைகளை, பழமைவாதங்களை வழிவழி வந்த மரபாக ஏற்று என்னுள் குடியிருந்த கீழ்த்தரமான செல்லையாவினால் நான் என் சுருதியை புரிந்து கொள்ளாமல் போய்விட்டேன்.

இன்று அவள் போய்விட்டாள். அவளின் பிணத்தை பார்க்க போகவா வேண்டுமா? என்று முடிவெடுக்கத்தான் இங்...

எல்லோருடைய முடிவும் அநேகமாக போகக் கூடாது என்பதுதான். வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளும் என் மனைவி, சுருதியின் தாய் சிவகாமியின் முடிவு கூட பெரும்பாலும் அப்படித்தான். இவர்கள் எல்லோரையும் விட சுருதி விடயத்தில் விடாப்பிடியாக இருந்த என் முடிவை எல்லோரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் நான் இதில் போகக்கூடாது என்று முடிவெடுப்பேன் என்ற நம்பிக்கையில்தான் எல்லோரும் இந்த முடிவிலிருக்கிறார்கள்.

நானும் சுருதியும் சந்தோஷமாக வாழ்ந்த நாட்கள் மிகக் குறைவு. செல்லரித்து போன கட்டுக் கோப்புக்களை நெடுஞ்சுவர்களாக கொண்டுள்ள இந்த சமூகத்தின் ஒட்டுமொத்த உருவமான என்னுடன் வாழ்ந்ததன் மூலமே இந்த சமூகத்துடன் போராடிவாழ்ந்து கொண்டிருந்த என் உயிர் சுருதி இன்று போராடியே போய் விட்டாள்.

எனக்கும் அவளுக்கும் நடந்த போராட்டங்களில் நான்தான் எல்லா இடங்களிலும் தோற்று போயிருக்கிறேன். நான் தோற்கும் போதெல்லாம் என்னுடன் ஒட்டியிருந்த பழமைவாதமும் வரட்டுக் கௌரவமும் என்னை சாட்டையால் அடித்து சுருண்டு போக வைத்தன.

இவற்றை தாங்கிக் கொள்ள முடியாமல் துவண்டுபோக துவண்டுபோக அது சுருதியின் மேல் ஆத்திரத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது.

ஆனால் அவளோ ஒரு புன் சிரிப்புடன் நிதானமாக வாழ்ந்து காட்டிவிட்டாள். நான் அவளுக்கு தகப்பன் என்பதைவிட அவள் எனக்கு ஒரு புதுமைத் தாய் என்பதை இபபோதுதான் உணர்கிறேன்.

நானும் சுருதியும் வாழ்ந்த வாழ்க்கை ஒரு சுருதி பேதம்தான்.

சுருதி மேல் படிப்பு படிக்க முடிவெடுத்த போதுதான் அவளுக்கும் எனக்கும் முத...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுருதி சின்னவளாய் இருந்த போது ஒரு நாள்,
எங்கள் வீட்டு வேலியை அடைத்துக் கொண்டிருந்த முருகனுக்கு சிவகாமி சிரட்டையில் தேநீர் கொடுத்தாள்.இதை வேடிக்கையாய் பார்த்துக் கொண்டிருந்த சுருதி,

ஏன் அம்மா எங்கள் நாய் குட்டி ஜிம்மிக்குகூடபீத்தளை பாத்திரத்தில் தண்ணி வைக்கிறியள். முருகன் மாமாவுக்கு மட்டும் ஏன் சிரட்டையில் தேத்தண்ணி கொடுக்கிறீர்கள். நாங்கள் குடிக்கிற எவர்சில்வர் கோப்பையில் கொடுத்தால் என்ன அம்மா? என்று கேட்டாள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு கோபத்தால் முகம் எல்லாம் சிவந்து விட்டது. எனக்குள் குடியிருந்து என்னை ஆட்டிப்படைக்கும் பழமைவாதி செல்லையா முழித்துக் கொண்டான்.

சுருதி கேட்ட கேள்வியில் உள்ள நியாயம் என்னை கூனிக்குறுக வைத்தது. அவள் முருகனை மாமா என்று அழைத்தது கோபத்தால் நிலையிழக்க வைத்தது.

எனது கோபமும் பழமைவாதமும் சேர்ந்து சுருதியின் முதுகில் பிரம்பால் அவளின் கேள்விக்கு பதில் கூறின.

நியாயமாகப் பார்த்தால் நாங்கள் செய்த ஒரு கேவலமான செய்கையை அவள் கேட்டிருக்கிறாள். அவளோ சிறுமி .அவளின் கேள்விகளுக்கு நாங்கள் சரியான விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். எங்களுக்கு தெரியாததை. அல்லது எங்கள் பிழைகளை பிள்ளைகள் கேட்கும் போது நாம் ஆத்திரப்பட்டு விடுகிறோம்.இதனால் பெரும்பாலான பிள்ளைகள் விளக்கமில்லாதவர்களாகவே வளர்ந்து விடுகிறார்கள்.

கற்கால நாகரீக சாதிக் கொடுமையை யார் தோற்றுவித்தார்கள்? எனக்கு இதை யார் விளங்கப்படுத்தினார்கள்? என் அப்புவுக்கு இதை யார் சொல்லக் கொடுத்தார்கள்? யார்? யார்? எனக்கு தெரியவோ புரியவோ இல்லை.

ஆனால் இந்த நடைமுறை பேணிப் பாதுகாக்கப்பட வேணுடுமென்பதில் எங்களுக்குள் ஒரு வெறியே இருக்கிறது. இது மனிதத்தை இழந்துவிட்ட மிருகவெறி.

அன்று யாரை மாமா என்றாளோ அந்த முருகனை சுருதி உண்மையிலேயே மாமா ஆக்கிக் கொண்டாள். முருகனின் மகன் பிரசன்னாவை காதலித்திருப்பதாகவும் கல்யாணம் செய்யப் போவதாகவும் கூறினாள்.

சுருதி எடுத்த முடிவை விட,அவள் பிரசன்னாவையும் அழைத்துக் கொண்டு நேராக என்னிடம் வந்து தனது விருப்பத்தை நிதானமாக உறுதியாக கூறிய விதம் என்னை அதிர்ச்சி அடைய வைத்தது.

இப்படியும் ஒரு பெண் இருக்க முடியுமா என்று இன்று நான் வியந்து போகிறேன். ஆனால் அன்று..........

முதல் பிரச்சனையே எனக்கு முன்னால் கைகட்டி நிற்கும் முருகனின் மகன் வீட்டுக்குள் காலெடுத்து வைத்ததில்தான் வெடித்தது.

நில்லடா வெளியே என்ன தைரியமிருந்தால் என் வீட்டுக்குள் காலடி எடுத்து வைப்பாய்.
என்னையுமறியாமல் நான் கத்தினேன்.

பயத்தில் நடுங்கிப் போன பிரசன்னா வெளியே போய் நின்று விட்டான்.ஆனால் சுருதியும் வெளியே போய் அவனுடன் நின்று கொண்டாள்.

அப்பா!யாராவது செருப்புடன் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்திருந்தாலே உங்களுக்கு பிடிக்காது. அவர்கள் போன பின்பு வீட்டை தண்ணீர் ஊற்றிக் கழுவுவீர்கள். அதுவும் இவர் உள்ளே வந்து விட்டார். இனிவீட்டையே இடித்துவிட வேண்டியதுதான். ஆனால் நான் அவருடன் வாழப் போகிறவள். நான் உள்ளே வந்தாலும் தீட்டுத்தான். நான் அவருடனேயே நின்று கொள்கிறேன். என்றாள் சுருதி நிதானமாக.

எப்பொழுதும் மனைவி எனக்கு அடங்கிப் போக வேண்டும்.மகள் நான் சொன்னபடி நடக்க வேண்டும். என்ற மோட்டு நம்பிக்கை கொண்டவன் நான்.

நான் சொல்வதை அவர்கள் கேட்க வேண்டுமே தவிர அவர்களுக்கும் தங்கள் கருத்தை சொல்வதற்கு சுதந்திரம் உண்டு என்பதை நான் படித்தவனாய் இருந்தும் [illegible] விளங்கிக் கொள்ளும் பக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வம் போதாதவனாய் இருந்தேன். நான் படித்தவன்தான், ஆனால் அறிவாளி இல்லை.

சுருதியின் வார்த்தைகள் எனக்கு அவமானமாய் இருந்ததுடன் கோபத்துக்கு மேலும் சுருதி சேர்த்தன. உணர்ச்சிகளுக்குள் அகப்பட்டுபோன நான் சற்றும் எதிர்பாராமல் சுருதியின் கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்துவிட்டேன்.

சுருதி இதை சற்றும் எதிர்பார்க்கவில்லைதான்.ஆனால் அவள் நிதானமிழக்கவில்லை. அதே புன் சிரிப்பு. அவளின் செய்கையும் புன்சிரிப்பும் எனக்கு ஆத்திரத்தை ஊட்டியது.

நான் உயிருடன் இருக்கும்வரை இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்கமாட்டேன். நாலெழுத்து படித்தவுடன் கட்டுபாடுகளை உடைத்தெறிவோம் என்ற திமிரா? என்னை மீறிக் கல்யாணம் செய்வதாய் இருந்தால் வீட்டை விட்டு வெளியே போய்விடு. என்று காட்டுகூச்சலாக கத்தினேன்.

நான் அப்பவே சொன்னேன் பொட்டை பிள்ளைகளுக்கு எதுக்கு படிப்பெண்டு?கேட்டியளே, காதல் பண்ணுறாளாம் காதல். நாங்கள் எல்லாம் வேலிக்குள்ளை இருந்து வளர்ந்து பெத்தவை கழுத்தை நீட்டச் சொன்னவனுக்கு நீட்டிப்போட்டு,கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் எண்டு வாழுறம்.நான் அப்பவே படிச்சு படிச்சு சொன்னனான் கேட்டியளோ இனி நாங்கள் என்னெண்டு சாதிசனத்தின்ரை முகத்திலை முழிக்கிறது.

என்று ஒரு ஒப்பாரியே வைத்துவிட்ட சிவகாமி சீலைத்தலைப்பால் அழுதமுகத்தையும் மூக்கு நீரையும் துடைத்துக் கொண்டாள்.

அப்பா! அம்மா அழுவதில் நியாயமிருக்கிறது.ஆனால் நீங்கள்.......

நானும் இந்த சாதிசனத்தோட வாழ்ந்துதான் சுடலை போக வேண்டும்.என்னாலும் அம்மாவாலும் இநத உறவுகளிலிருந்து ஒதுங்கி வாழ முடியாது.

நீங்கள் படித்தவர்.எனக்கு படிப்பித்தவர். வெள்ளை நிறத்தில் ஒரு குட்டி, மண் நிறத்தில் ஒரு குட்டி, குட்டிகள் எத்தனை நிறமானாலும் அவை அனைத்தும் பூனைகள் அன்றோ என்று சொல்லிக் கொடுத்தது. சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம். பாதகம் செய்பவரைக் கண்டால் காறி உமிழ்ந்துவிடு பாப்பா என்று சொல்லிக்கொடுத்தது.கசடறக் கற்பது ஒன்றும் பெரிதல்ல கற்றபின் அதற்குதக நிற்பதே பெரிது என்று விளங்க வைத்தது எல்லாமே நீங்கள் தானே அப்பா. சாதியின் பெயரால் எங்களை பிரிப்பதை விட்டுவிட்டு எங்களை மனிதர்கள் என்று எண்ணும் மானுட நேயத்தை புரிந்து கொள்ளுங்கள் அப்பா.

அவள் நியாயமான கருத்துக்களை கூறுவது, நான் சொல்லிக் கொடுத்தவற்றை கொண்டே என்னை தாக்குவது எப்போதுமே நெஞ்சில் முள்ளாகக் குத்தும். இன்னும் சொல்லப் போனால் எனது பிழைகளை சுருதி சுட்டிக் காட்டும் போது அதை ஜீரணிக்கும் சக்தி எனக்கிருக்கவில்லை என்பதே சரி.

நாகரீக வளர்ச்சி மிக்க வருங்கால சந்ததியை உருவாக்கும் உன்னத பணியான ஆசிரியர் தொழிலை நான் செய்திருந்தும்,ஒரு சாதாரண மனிதனாக வாழ்ந்து விட்டேன் என்பதை நினைக்கும் போது வெட்கப்படுகிறேன்.

சுருதி பிரசன்னாவுடன் போய் வாழ்க்கை நடத்தி பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன.

உரிமைக்கும், சமுகமாற்றத்துக்கும் வேண்டி இயக்கங்கள் நடாத்திய போராட்டத்தினால் எத்தனை படிப்பினைகள் எத்தனை மாற்றங்கள், ஆனால் எங்கள் பழமை வாதத்துக்குள் இருந்து நாங்கள் இன்னும் மாறவே இல்லை.

சுருதியை தலை முழுகிவிட்டு பெரிய சாதனை செய்தவர்கள் போல் வாழ்ந்து வந்தோம்.

எங்களை ஒடுக்கும் அரசை எதிர்த்து போராடுவதை நியாயப்படுத்தும் நாங்கள், இந்தப்பிரசன்னாக்களையும் முருகன்களையும் அடக்குகிறோமே இது என்ன நியாயம்?

இது பற்றி இன்று சிந்திக்கின்றேன். அன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் பல்கலைக் கழகத்துக்கு தெரிவான போது தாய் சிவ காமிக்கு கொஞ்சம்கூட பிடித்திருக்கவில்லை. ஏன் நான் ஒரு ஆசிரியனாக இருந்தும் எனக்குகூட பிடிக்கவில்லை.

அறிவுக்கு நாலெழுத்து படித்தால் போதும். நாளைக்கு யாரோ ஒருவன் கையில் கட்டிக் கொடுத்து விட்டால் அடுப்பும் புகையுமாய் இருக்க வேண்டியவருக்கு பெரிய படிப்பெல்லாம் எதற்கு என்று தனக்கு தெரிந்தவற்றை அளந்து கட்டினாள் சிவகாமி.

ஒரு பெண்பிள்ளை கொஸ்ரலில் தங்கி படிக்கிறதை. பஸ்ஏறி ரயில்ஏறித் திரிவதை பார்த்து நாலு பேர் நாலுமா திரிப் பேசினால் நாளைக்கு ஒருத்தன் கையில் கட்டிக் கொடுக்க முடியாது. ஒரு கோயில் குளம் போறதெண்டாலும் ஆட்கள் பட்டு தீட்டு படாமல் காரிலை போய் வாற குடும்பம் நாங்கள். அப்பிடித்தான் படிச்சாலும் ஒரு என்ஜினியர்.ஒரு டாக்டர் என்று படிச்சாலாவது சம்பளம் கிம்பளம் என்று நாலு காசு சம்பாதிக்கலாம். ஒரு மதிப்பு இருக்கும்.நாளைக்கு ஒரு கௌரவமான இடத்திலை கட்டிக் கொடுக்கலாம். நீ படிக்க போறதோ பொருளாதாரம். பொருளே ஆதாரமான படிப்பை படிச்சாலும் பரவாயில்லை என்று முன்னுக்கு பின் முரணான நியாயங்களை சுருதியிடம் உளறினேன்.

அப்பா!அடுப்பூதுவதற்கும் அறைக்குள் அடங்குவதற்கும் மட்டும்தான் பெண்கள் என்று நினைக்காதீர்கள்.நாங்கள் வெறும் கிணற்று தவளையாய் இருக்காமல் சற்று வெளியே கழுத்தை நீட்டிப் பார்த்தால் உலகம் எங்கே போய் விட்டது நாங்கள் எங்கே நிற்கிறோம் என்பது புரியும். என்னால் உங்கள் கட்டுக்கோப்புக்குள் பெட்டிப் பாம்பாய் அடங்கிப்போக முடியாது.நான் படிப்பதென்பதில் எந்த மாற்றமும் இல்லை.

சுருதி எங்கேயோ என்னை சாட்டையால் அடித்தது போல் இருந்தது.

நீ படிக்கப் போறது அம்மாவுக்கு பிடிக்கவல்லை,எனக்கும்தான். இருந்தாலும் நீ பொருளாதாரம் படிக்கிறது எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை.

அதென்ன அப்பா சம்பளமும் கிம்பளமும் கிடைக்கக்கூடியதும், கௌரவமுமானது மென நீங்கள் நினைக்கும் டாக்டர், என்ஜினியர் படிப்பென்றால் உங்கள் சமுகப் பார்வைகள் எல்லாம் ஓடிஒழிந்து கொண்டு விடுகின்றன.அப்பா எங்க நாட்டு பொருளாதாரம், அதன் உற்பத்தி திறன்கள், இதைக் காலம் காலமாய் கட்டுப் பெட்டியாய் வளர்த்து வரும் அமைப்பு முறைகள் இவற்றை நாம் தெரிந்து கொண்டால்தான் எங்களால் ஒரு முழுமையான வாழ்க்கை வாழமுடியும். இன்னும் சொல்லப் போனால் எனக்கு விரும்பிய துறையில்தான் நான் படிக்க முடியும் ,வெறும் உலர்ந்து போன கௌரவங்களுக்காக என்னை வற்புறுத்தாதீர்கள் அப்பா.

எனக்கென்னவோ மேலே படிக்கிறது அவ்வளவு நல்லதாக படவில்லை சுருதி.

அப்பா நீங்கள் ஒரு ஆசிரியர். வீட்டுக்குள் பெண்ணை பூட்டிவைக்கும் விந்தை மனிதர் கூட்டத்தில் நீங்கள் சேர்ந்து கொள்ளாதீர்கள் அப்பா.

இப்படியாக விவாதங்கள், தாயின் அழுகைகள் ,யாருமே சாப்பிடாத உண்ணா விரதங்கள் என்று தொடர்ந்து இறுதியில் அவளே வென்றாள்.

அவளின் விவாதங்கள்,நியாயங்கள் இன்று என்னை விழிப்படைய செய்திருக்கின்றன.ஆனால் அன்று சுருதியையே வெறுப்படைய செய்திருக்கிறது. இருப்பினும் எமது ஒரே பிள்ளை என்பதால் பாசம் எங்களைப் பலவீனப்படுத்தி சுருதியின் வழிக்கு சம்மதிக்க வைத்துவிடும்.

அவளது கல்யாணத்தில் சுருதி நடத்திய போராட்டம் என்னை கண்மூடித்தனமான வெறியனாக்கியதெனலாம்.

சுருதி தனது துணையை தேடிக் கொண்டதானது எங்கள் வீட்டுக்குள்,எங்கள் சுற்றத்து உறவுகளுக்குள் பெரிய பூகம்பத்தயே உண்டு பண்ணிவிட்டது.

நான் படித்தவன்,நான் ஆசாரசீலன், நான் சமுகக் கட்டுபாடுகளை சம்பிரதாயங்களை அனுசரித்து நடப்பவன் என்கின்ற எண்ணம் எனக்கு எப்போதும் உண்டு. இதை ஒரு கர்வம் என்று கூடச் சொல்லலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுருதிக்கு பைரவி சிந்து என இரு பிள்ளைகள். சுருதி யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக வேலை செய்து கொண்டிருந்தாள்.

இனவெறி அரசுக் கெதிரான ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள் நடந்த இடங்களில் எல்லாம் சுருதியைக் கண்டதாக என்னிடம் பலர் வந்து கூறினார்கள்.

பிள்ளைப் பாசம் என் நெஞ்சுக்குள் எங்கோ ஒரு மூலையிலிருந்து இதயத்தை நன்னியது.

இவளுக்கேன் விசர் வேலைகள், பேசாமல் தன் வேலையைப் பார்ப்பதற்கு.

எனக்குள் நானே அலட்டிக் கொண்டேன். அது ஏன் என்பது எனக்கு புரியவில்லை.

கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் நாங்கள். சுருதி என்மகள் என்பதால் எங்கே அவளை இழந்துவிடுவோமோ என்றதவிப்பு. ஆக எங்களில் எந்த இழப்புமில்லாமல் யாரோ தங்கள் உயிர்களை பலிகொடுத்து விடுதலையை வென்று தந்தால் நாங்கள் அங்கே சுகமாக வாழ்க்கை நடத்த வேண்டும். என்ன சுயநலம்! என்ன சுயநலம்!

வீட்டுக்கு வீடு எங்களைப்போல, தங்களில் இழப்பில்லாமல் போராட்டம் நடக்கவேண்டும் . நாம் பார்வையாளர்களாய் இருப்போம் என்று நினைத்தார்களோ என்னவோ போராட்டம் இப்படியாகிவிட்டது.

இன்று மக்கள் வாய்மூடி மௌனமாகிவிட்டனர். சாப்பிடுவதற்கு தவிர்த்து பேசுவதற்கு என்று வாய்திறந்தால் மண்டைக்கு வெடி. எங்கும் ஆயுதஅராஜகத்தின் அட்டகாசங்கள்.

இப்போதைக்கு எங்களுக்கு தேவையானதெல்லாம் நம்மவரிடமிருந்து நமக்கு விடுதலை. இதனால் அரசிடமிருந்தான விடுதலையை அநேகமாக எல்லோரும் மறந்த மாதிரித்தான். அழகுசிலை வடிக்கப் போய் அனுமார்வடிச்ச கதையாய் போச்சு.

எலோரும் இதற்கு முடிவு வேண்டுமென்று

வேண்டுமென்கிறோம். ஆனால் பூனைக்கு மணிகட்ட நாங்கள் தயாராய் இல்லை.

அமைதி சமாதானம் வேண்டும். எங்களுக்கு சகஜ வாழ்க்கை வேண்டும் என்று மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டம் நடத்தவேண்டுமென்று, மானுடம் விரும்பிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஒரு குழுவினர் வீடுவீடாகசென்று மக்களை அழைக்கிறார்களாம்.

ஊரெங்கும் இவர்கள் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. இவர்களுடன் சேர்ந்து சுருதியும், பிரசன்னாவும் போவதாக பார்த்தவர்கள் என்னிடத்தில் கூறினார்கள்.

காட்டுதர்பார் நடக்கும் நாட்டிலே நியாயத்தைப் பற்றி பேசுபவர்கள் நிற்கவைத்து சுடப்படுவார்கள் என்பது இவளுக்கு தெரியாதா என்ன. எங்கே நாம் சுருதியை இழந்துவிடுவோமோ என்ற பயம் என்னை தொற்றிக் கொண்டது.

சுருதியை தலைமுழுகிவிட்டதாய் கூறி பேரப்பிள்ளைகளைக்கூடப் பார்க்காமல் சாதியைச் சுவர்போட்டு மறைந்திருக்கும் உனக்கு அவளை இழந்துவிடுவோம் என்ற பயம் ஏன்?

எனக்குள் நானே கேட்டுக் கொள்கிறேன். அதற்கு விடை எனக்கே தெரியவில்லை ஏன்?

கடந்த வாரம் எதிர்பாராமல் சுருதியை தெருவில் சந்திக்க நேர்ந்தது. அதே புன்சிரிப்பு. அதே நிதானம். அதே உறுதி.

எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அவளோ எதுவும் நடக்காதவள் போல்,

எப்படி அப்பா இருக்கிறீர்கள்? அம்மா எப்படி இருக்கிறா?

நான் அவளை இழந்து விடுவோமோ என்று துடிக்கிறேன். அவளோ அதைப்பற்றி அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை

சுகமெல்லாம் கிடக்கட்டும். என்னுடைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடாவிலிருந்து கடிதம் போட்டிருக்கிறான். உனது படிப்புக்கு அங்கே நல்ல வேலை எடுக்கலாமாம். பேசாமல் அவரையும் கூட்டிக்கொண்டு கனடாவுக்கு போயிடேன். இந்த ஊர்வலம் போராட்டங்கள் எல்லாம் எதுக்கம்மா?

என்னையுமறியாமல் படபடவென்று சொன்னேன். ஆனால் அவளை இந்தப் படிப்பு படிக்கவேண்டாம் என்று சண்டை பிடித்தது ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும் அலட்டிக்கொடளவில்லை. இவள் இதுக்கு சம்மதித்தால் அவளின் உயிருக்கும் பாதுகாப்பு. இந்தச் சாதிப்பிரச்சனையும் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்துவிடும் என்ற வக்கிர சுயநலபோக்கில் தான் அவளை கனடா போகுமாறு கேட்டேன்.

சுருதி என்னுள் எதையோ கண்டவள் போல் லேசாகச் சிரித்தாள்.

அப்பா எனக்கு வெளிநாடு போக எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்தன. நான் நிராகரித்துவிட்டேன். நான் வெளிநாடே போகப் போவதில்லை. எனது மக்களுடன் சேர்ந்து போராடி வாழவே விரும்புகிறேன்.

அப்படியானால் என்ஜினியர் பேரம்பலம், விரிவுரையாளர் வாமதேவன், காட்டடைப்பு கந்தையாவின் மகன் சபா மாஸ்டர் இவைஎல்லாம் வெளிநாடு போயிருக்கினம். இவர்கள் எல்லாரையும் முட்டாள்கள் என்கிறாயா?

இவர்கள் முட்டாள்கள் இலலை. கோழைகள் என்கிறேன். சாதாரண மக்கள் போராட்டத்தை சாட்டி காசு சம்பாதிக்க ஓடுறது பெரியவிசயமில்லை. அவர்களுக்கு இதன் தார்ப்பரியம் விளங்கவில்லை ஓடுகிறார்கள். ஆனால் இந்த புத்திஜீவிகள் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு, இந்தச்சமூகத்தின் மீது தமக்குள்ள பொறுப்பை தூக்கி எறிந்துவிட்டு தாம்தப்பினால் போது மென்று ஓடுகிறார்கள். அங்கே போய் இருந்து கொண்டு போராட்டத்தைபற்றி ஒப்பாரி வைக்கிறார்கள். தம்மை ஸ்தாபன மயப்படுத்தாது உதிரிகளாக காலத்தை கடத்துகிறார்கள். இவர்களைப் போல என்னால் ஓடிப் போக முடியாது அப்பா.

நீங்கள் இப்ப நடத்தப்போற விசயத்துக்கு உங்கள் உயிர் பலியாகப் போகுது தெரியுமா?

உங்களைப் போன்றவர்கள் சாதியைச் சொல்லி மற்றவர்களைச்சுரண்டிச் சேர்த்த காணியும் காசும் இருக்கு. உங்கள் பிள்ளைகள் வெளிநாடு போகலாம். உயிரைக்காப்பாற்றிக் கொள்ளலாம். ஆனால் உங்களுக்கு உழைத்து உழைத்து உங்கள் சுரண்டலால் இழப்பதற்கு எதுவுமில்லாமல்போனவர்களின் பிள்ளைகள் எப்படியப்பா வெளிநாடு போவது. அவர்கள் உயிர் மட்டும் உயிர் இல்லையா அப்பா?

இங்கே நியாயத்துக்கு இடமில்லை. அமைதி சமாதானம் மீண்டும் வரப்போவதாக எனக்கு தெரியவில்லை. இந்த சமயத்தில் உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதை விடுத்து. மற்றவர்களை பற்றி சிந்திப்பது புத்திசாலித்தனமாகப் படவில்லை.

எப்படி அப்பா அமைதியும் சமாதானமும் வரும். இதைப்பற்றி தெரிந்து கொண்டவர்களே ஓடித்தப்பி ஒப்பாரிவைத்துக் கொண்டிருந்தால் அமைதியும் சமாதானமும் வானத்திலிருந்தா குதிக்க போகிறது. அப்பா எங்கள் விடுதலைக்கு நாங்கள்தான் போராடவேண்டும். கோபிநாத் சிங்கும் பாஸ்கரராவும் கூலிக்கு வந்து போராடி பெற்று தருவார்கள் என்றோ, நாங்கள் காசை மட்டும் கொடுத்தால் சரி கந்தனின் மகனும் சுப்பனின் பேரனும் துவக்கு தூக்கட்டும். எங்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் பாதுகாப்பாய் இருக்கட்டும். இங்கு போராடுபவர்களின் இழப்பினால் விடுதலை என்று ஒன்று கிடைத்தால் எங்கள் பிள்ளைகள் வந்து அரசாளட்டும் என்று நினைப்பதில் அர்த்தமேயில்லை அப்பா.

இப்ப முடிவாக எனக்கு என்னதான் சொல்கிறாய்?

அப்பா இப்போது மக்களுக்கு உடனடித் தேவையெல்லாம், அர்த்தமற்ற படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும். அமைதியான நிம்மதியான சுகஜ வாழ்க்கை வேண்டும். ஆயுத பயத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டும். மனித நேயத்தை விரும்பும் மக்களை நேசிக்கும் எல்லோரும் இதில் பங்கெடுத்துக் கொள்ள வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ற்றுக் கடமையாக கருதுகிறேன். ஆகவே நிலவுக்குப் பயந்து பரதேசம் போனவளாய் என்னால் கனடா போக முடியாது. ஏற்கனவே எனது தோழி தாரணி என்னை கனடா வரும்படி கேட்டிருந்தாள். போராடிக்குவிந்து வரும் பிணங்களின் மேல் நடந்து கனடா வரும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடாதே என்று எழுதிவிட்டேன். ஏதோஒரு உணர்ச்சியில் எழுதிவிட்டு இப்போது என்னைக்காப்பாற்றிக் கொள்ள எழுதியதை மறந்துவிடும் போலியாய் வாழ விரும்பவில்லை. ஏன் அப்பா நாங்கள் கனடா போய்விட்டால் உங்கள் கௌரவப் பிரச்சனையிலிருந்து விடுபடமுடியுமென்று கருதுகிறீர்களா அப்பா?

நான் திடுக்கிட்டேன். எனக்குள் மீண்டும் நெருடல். எப்படி எனது எண்ணங்களை படம்பிடித்துக்காட்ட இவளால் முடிகிறது. இதுதான் இரத்த பந்தமா? இல்லையில்லை அவள் கசடறக் கற்றதன்படி நின்றதால் பெற்ற அனுபவங்கள்தான் அவளால் என் நினைவுகளை எடைபோடவைக்கின்றது என்பதை இப்போது நான் உணர்கிறேன்.

சுருதி வரலாற்றை வெல்லவேண்டியவள் என்பதை உணர்ந்து கொள்ளமுடியாத நான், அவளை என்னால் வெல்ல முடியவில்லை என்று ஆதங்கப்பட்டவனாக நடையைக் கட்டினேன்.

நேற்று ஊர்வலம் நடந்தது. பிரசன்னாவும், சுருதியும் பிள்ளைகளும் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்களாம். குண்டுச்சட்டிக்குள் குதிரைஓடிப் பழகிப்போன நானும் சிவகாமியும் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்தோம்.

ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது. அமைதி வேண்டும்!சமாதானம் வேண்டும்! சகஜவாழ்க்கை திரும்ப வேண்டும்!! என்று கோஷமிட்டுக் கொண்டு சுருதி முன் வரிசையில் போய்க் கொண்டிருந்தாளாம்.

திடீரென துப்பாக்கி வேட்டுக்கள்!!! எங்கோ இருந்து வந்த குண்டுகள். மனித நேயத்தை மதித்த, மக்களை நேசித்த சமாதானப்புறா சுருதியை சல்லடை போட்டன. காயமடைந்த மூவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப்பட்டனர்.

மானுடம் என்பது என்னவென்று துப்பாக்கிச் சனியன்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.ஆனால் நரம்புகளும் எலும்புகளும் சதைகளுங்கொண்ட துப்பாக்கி ஏந்தும் பிண்டங்களுக்குமா?.......

மக்கள் எழுச்சிகளை சந்திக்க திராணியற்ற, ஜீரணிக்க வலுவற்றவர்களால் படுகொலை செய்யப்பட்ட சுருதியை இனந் தெரியாதவர்கள் சுட்டுக் கொன்றனர் என்று பத்திரிகைகள் எழுதியுள்ளன. அவர்கள் என்ன செய்வார்கள் பாவங்கள்.

மக்களுக்கு சுதந்திரம் வேண்டுமென்று ஏற்பட்ட எழுச்சிகள், விடுதலைக்காய் புறப்பட்ட துப்பாக்கிகள், இன்று திசை திரும்பி சொந்த மக்களையே சுவை பார்ப்பதேன்?

இவற்றுக் கெதிராய் போராடாமல் வீட்டுக்குள் அடைபட்டுபோன எனக்கு, என் போன்றவர்களுக்கு சுருதி கற்று தந்தது பாடமா?

எத்தனை உயிர்களை இழந்தும் திருந்தாத நாங்கள், இந்தச் சுருதியால் மட்டும் திருந்திவிடப் போகிறோமா என்ன?

இதை இபபடியே தொடர அனுமதிக்கப் போகிறோமா? இதை நான் யாரிடம் கேட்பது. இதற்கு விடையை நான்தான் தேடிக்கொள்ள வேண்டும்.

சுருதி ஒரு பெண்ணாய் இருந்து எத்தனை கேள்விகளுக்கு விடையளித்து விட்டாள்.

ஒரு தனிமனித வாழ்க்கையை சுற்றி எத்தனை குறுக்கு மதில்கள். இவை நீண்டு வளர்ந்து சமூகத்துள் நெடுஞ்சுவராய் நிற்கின்றன.

சுருதி படிக்கப் போய்,கல்யாணம் செய்யப் போய் போராடியே வாழ்ந்தாள் பெண்விடுதலைக்காய், சாதிக்கொடுமைக்கெதிராய் அவள் போராடியதை புரிந்து கொள்ளும் பக்குவம் எனக்கிருக்கவில்லை.
வாழ்க்கையில் வரட்டுக் கௌவரவத்திற்காய் போலியாய் வாழாது எளிமையாய் வாழ்ந்து காட்டியவள் சுருதி.

www.tamilarangam.net

வெளி நாட்டு மோகத்தை வெறுத்து, மக்களின் விடுதலைக்காய் மக்களுடன் இருந்து கந்தக காற்றை சுவாசித்துக் கொண்டே அந்த நாற்றத்தை தூரத்த போராடினாள்.

இந்த இடங்களில் எல்லாம் நான் சுருதியின் மாணவனாகிறேன். அவளிடம் கற்றுக் கொள்ளவேண்டியது எவ்வளவோ.

எனக்கு தெரிந்ததெல்லாம் என் சுருதி. ஆனால் எத்தனையோ சுருதிகள், பிரசன்னாக்கள் புறப்பட்டு விட்டார்கள். இவர்களுக்கு முன்னால் இந்த நீண்ட நெடிய சாதிப் பெருச்சுவர்கள்.........

நான் என்னுள் இருந்து என்னை ஆட்டிப் படைக்கும் பழமைவாத செல்லையாவுக்கு அடிபணிந்து சுருதியைப் பார்க்கப் போகாமல் இருந்து, எனது சுற்றத்தவர்கள் தரும் வரட்டுக் கௌரவ பட்டத்தை வாங்கிக் கொள்வதா?

அல்லது சுருதி கற்றுதந்து சென்றுள்ள பாடத்துக்கமைய, குறைந்தது பழமைவாதத்தை சாதிவெறியை தூக்கி எறிந்துவிட்டு சுருதியைப் பார்க்கப் போவதா?

போனால் சுற்றத்தவர்கள் ஒதுக்கிவிடுவார்களே. இவர்கள் என்ன ஒதுக்குவது நான் இவர்களை ஒதுக்கிவைப்பேன். இல்லாவிடில் இதுவரை நேரமும் நான் அசை போட்ட சிந்தனைகளுக்கு அர்த்தமேயில்லை.

எப்படியும் சுருதியைப் பார்க்கப் போவது என உறுதியான முடிவெடுத்தவனாய் நான் உட்கார்ந்திருந்த சார்மனைக்கட்டிலில் இருந்து எழுந்து, தொண்டையை சரிசெய்து கொண்டு சூழ உள்ளவர்களுக்கு எனது முடிவை சொல்ல ஆயுத்தமானேன்.

உலகக்கண்ணாடி-2

# தோழர். பிடல் கஸ்ரோவின் காங்கிரஸ் உரை

மாசி இருபத்தாறாம் திகதி கியூபாவின் தலைநகரான கவானாவில் நடைபெற்ற கியூபன் கயுனிஸ்ட் கட்சியின் காங்கிரஸில் தோழர் பிடல் கஸ்ரோ உரையாற்றினார். பாடிஸ்டாவை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்த பிற்பாடு நாம் எமது மக்களின் முன்னேற்றத்துக்காக மேலும் உழைப்பதற்கு எமது கட்சியை செழுமைப் படுத்துவதும் பாதுகாப்பதும் தேவையாக உள்ளது. நாம் இக்காங்கிரஸில் பலகட்சிகள் இயங்குவதற்கானதிட்டத்தை ஆராய்ந்துள்ளோம் அவைகள்சுதந்திரமாக இயங்கும் அதே வேளை எமது மக்களின் முன்னேற்றத்துக்காக நாம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி இணைந்து செயல்பட முன்வர வேண்டும்.மூன்றாம் உலகநாடுகள் முற்றுமுழுதான முதலாளித்துவ ஆட்சியைக் கொண்டதல்ல. மாறாக ஏகாதிபத்திய நலன்களுக்காக தரகர்கள் அமர்த்தப்பட்டு ஜனநாய மறுப்பை மேற்கொண்டு வருகின்றனர். அங்கே நடைபெறும் ஜனநாயக சூழலுக்கான போராட்டத்தில் எமது கரங்களும் இணையட்டும். வளைகுடாவில் யுத்தத்தினூடாக இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவும் அதன் நேசசக்திகளும் ஈனச் செயலில் ஈடுபட்டுள்ளதை நாம் வன்மையாக கண்டிக்க வேண்டும்.அதே வேளை ஈராக்கும் அரசியல் ரீதியாக பெரிய அளவில் பிழைவிட்டுள்ளது. சதாம் குஷேனின் பிழையால் மத்திய கிழக்கினில் ஏகாதிபத்தியத்தின் சரணடவுக்கு மேலும் வழி ஏற்பட்டுள்ளது என்று தோழர் பிடல் கஸ்ரோ காங்கிரஸில் ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

www.tamilarangam.net

# விமர்சனத்திற்கு ஒரு விமர்சனம்

அ. வேலாயுதம்.

ஐரோப்பாவெங்கும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலே சஞ்சிகைகள் தோற்றம் பெற்றன. இவைகளின் தோற்றம் இலக்கியச் சந்திப்பு வரையறையற்ற ஓர் அமைப்புள் பரிணமிக்க ஏதுவாயிற்று. இன்று இதே அமைப்பு இச் சஞ்சிகைகள் பற்றி கலந்துரையாடவும் ஆய்வு செய்யவும், விமர்சிக்கவும் முன்வந்துள்ளதும் ஓர் வகையில் வளர்ச்சியே.

சஞ்சிகை என்றால் என்ன? சமூகத்தில் இவைகளுக்குள்ள தேவை என்ன? இத் தேவைகளை எந்தளவிற்கு இவைகள் பூர்த்தி செய்கின்றன. அதன் மூலம் சமூகத்தில் என்ன மாறுதல்களைப் பிரதிபலிக்கின்றன. என்ன அடிப்படையில் சஞ்சிகைகளை வகைப்படுத்தலாம். இந்த வகைப்பாட்டில் சஞ்சிகைகளின் தோற்றம் இனங்காணப்படல் தவிர்க்கப்படமுடியாதது. ஆனால் திரு. சுசீந்திரன் கலந்துரையாடலில் மேற் கூறியவைகள் ஆராயப்படாது தோற்றல், மறைதல், சூழல், காலம், தேவை, நோக்கு என்ற அடிப்படையில் சென்றதால் அவர் சில விடயங்களைப் பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும் விட்டு விட்டுச் சென்றுள்ளார். இவ்வாறு நிகழ ஏதுவாக அமைந்தவைகளை அவரோடு சேர்ந்து நின்று நோக்குவோம்.

"தோற்றல் மறைதல் என்பன. சஞ்சிகைகளின் பொது இயல்புகள்" என்றார். இதற்கு காலமும் சூழலுமே பெரிதும் உதவுகின்றன. இந்த வகையில் ஜேர்மனியிலும் ஐரோப்பாவிலும் தோற்றம் பெற்ற சஞ்சிகைகள் தவிர்க்கப்படமுடியாதவை ஆனால் இவைகள் எந்த நோக்கில் தோற்றம் பெற்றன என்பதையும் அவர் சரியாக ஆய்வு செய்ய வில்லை.

திடீரென அதிகரித்த புலப்பெயர்வால் ஏற்பட்ட ஒரு தேக்கம் வடிகால் அற்ற சாக்கடையாகாது. தமிழ் மக்கள் கூட்டத்தின் செய்திகளையும் சீர்கேடுகளையும் தாங்கிய சஞ்சிகைகள், கையெழுத்துப் பிரதிகளாயும், உணர்வுகளின் வடிகால்களாயும் அந்தந்த நகரங்களில் தோற்றம் பெற்றன.

இத் தோற்றங்களுக்கு, இங்குள்ள அமைப்புக்களும், நிறுவனங்களும் பெரிதும் உதவின. இதைவிட சமூக நலனில் அக்கறை கொண்ட நம்மவர்களும் தமக்குள் இணைந்து இச் சஞ்சிகைகளை வெளிக்கொணர்ந்தார்கள்.

இதன் பெறு பேறுகள் ஜேர்மனியில் மட்டும் இருபத்தாறுக்கும் மேற் பட்ட சஞ்சிகைகள் தோற்றம் பெற்றன. இவைகளுள் பதின்மூன்றிற்கு மேலானவை இன்றும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. இவற்றை விட ஐரோப்பாவிலும் (ஜேர்மன் தவிர) எட்டுச் சஞ்சிகைகளுக்கு மேல் வெளிவந்துள்ளன. இவற்றுள் ஐந்துக்கு மேல் இன்னும் வெளிவருகின்றன.

இவைகளின் எண்ணிக்கைகளை எண்ணளவாகச் சொல்லாது விட்டாலும் அண்ணளவாகச் சொல்லியிருக்கலாம். அதன் மூலம் அதன் தாக்கம் உணரவைக்கப் பட்டிருக்கும். ஆனால் தோற்றல் மறைதலுக்குள் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டார்.

இவ்வாறு அதிகளவில் சஞ்சிகைகள் தோற்றம்பெற மேற்சொன்ன காரணிகளுடன் அரசியல், சமூகச் சூழல்களும், பயமற்ற தனிமையும் ஊக்கிகளாக அமைந்தன. முடிச்சவிழ்ந்த தேங்காய் சாக்குப் போல் பரவியிருந்த நமக்குள் தடையற்ற வசதிகள் வேண்டுமானால் ஒருவர் மூன்று, நான்கு சஞ்சிகைகளையும் நடத்தக்கூடிய வாய்ப்புகளைக் கொடுத்தது. கொள்கை, கருத்து முரண்பாடுகளால் கூட சஞ்சிகைகள் தோற்றம் பெற்றன. இவைகள் ஆரோக்கிய மற்றவையாக இருந்தும் தவிர்க்க முடியாதவைகளாகவே இருந்தன. இந்தக் குறைகளை மறைப்பதற்கு சுதந்திரத்தின் தத்துவ விளக்கத்தை மிகைப்படுத்திக் கூறிக்கொண்டோம். இவைகளையும் பேச்சாளர் சுட்டிக்காட்டியிருக்கலாம்.

இவ்வாறான தோற்றம் போட்டி, வாசிப்பு வறுமை, கொண்ட வாசகர்களை மேலும் வாசனை விருப்பிலிருந்து எட்டி வைத்துக் கொண்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருப்புக் கொண்ட வாசகர்களிடம்
எல்லாச் சஞ்சிகைகளையும் வாங்கி
வாசிக்கும் பொருளியல் நிலை இல்லா
மையும் இச் சஞ்சிகைகளை வேர் அற்ற
மரமாக்கி விட்டிருக்கிறது. உண்மை
களை எதிர் பிரச்சாரங்களாக கருதும்
பற்றற்ற வாசகர்களுக்கு முடக் கழுதைக்
கு சறுக்கின சாட்டுப் போல் அமைந்து
விடுகின்றன. என்ற கருத்துப் பட பல
செய்திகளை கோடிட்டு காட்டியமையும்
குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிலையிலிருந்து சஞ்சிகைகள்
கையெழுத்துப் பிரதிகளாகவே வெளி
வந்தன. இவைகளின் அமைப்பு வடிவங்கள்
தொழில் நுட்பங்கள் என்பன வியாபார
த்தையும், பண வருவாயையும் இலக்காக
க்கொண்டு வெளிவரும் இந்திய சஞ்சி
கைகளுடன் எப்படிப் போட்டி போட
முடியும். இந்தக் குறைகளுடன் ஆசிரியர்
குழுவினரின் நேரமின்மை, கடின உழைப்
பு, இவைகளையும் மிஞ்சிய காலதாமதங்
களுடன் வருவதும் சஞ்சிகைகளை வாசக
ர்களிடமிருந்து அந்நியப்பட வைத்தது.

கையெழுத்துப் பிரதிகளை வெளியிட்டு
இன்று கம்பியூட்ட அச்சு வரைக்கும் வளர்
ந்துவிட்ட சஞ்சிகைகளின் ஆசிரியர்
குழுவினருக்கு புகழாரம் சூட்டினார். உண்
மையை மறக்காமல் அவர்களின் உழைப்
பின் உயர்ச்சியை போற்றிய விதமும்
அவர்களைத் தட்டிக் கொடுத்து தடவி
விட்டதன்மையும் பாராட்டப்பட வேண்
டியதே.

சஞ்சிகைகளின் அமைப்பு வடிவங்களைப்
பற்றிக் குறிப்பிடும் போது ஏலையா,
வெகுஜனம் போன்றவற்றின் அட்டைப்
படங்களைச் சுட்டிக் காண்பித்தார்.
ஏலையா பனை மரத்தையே தொடர்ந்து
போடாது மாற்று முறைகளைக் கையா
ண்டால் சிறப்பாக இருக்கும் என்றார்.
பனிமலர், கதிர் போன்றவற்றின் தோ
ற்ற எழிலை விதந்து போற்றினார். இன்
னும் பழமையையே பேணும் அமைப்பு
முறைகளை சில சஞ்சிகைகள் கொண்டி
ருக்கின்றன.

உள்ளடக்கத்தை போடுவதன் மூலம் அடுத்
து என்ன வரும் என்பதை முன் கூட்டியே
தெரிந்து கொள்வதால் வாசகர்களுக்கு
ஆர்வம் குறைந்து விடும் என்றார். இவ்
வொழுங்குகளை மீறி பல சஞ்சிகைகள்
புதிய முறையில் வெளி வரவும் செய்
கின்றன. ஆசிரிய தலையங்கங்கள் முத
லாவதாக இருக்க வேண்டும் என்ற கோ
ட்பாடுகளையே நிராகரிக்கும் முறை
யை வரவேற்றார். இவ்வாறு சொல்லி
வருகையில் பழமையைப் பின் பற்றும்
சஞ்சிகைகளுக்கு ஏலையா, மண் என்பவ
ற்றை உதாரணம் கூறினார். இது அதிக
நேரத்தை சர்ச்சையில் கொண்டு சென்
றுவிட்டது.

புதிய உத்திகளைக் கைக்கொள்ளும்
சஞ்சிகைகளுக்கும் எடுத்துக் காட்டாக
பெயர்கள் சுட்டிக் காட்டப் பட்டிருந்
தால் இச் சர்ச்சையைத் தவிர்த்திருக்
கலாம். ஆனால் அப்படிப் பெயர் சூட்டு
வது பேச்சாளரைத் தர்ம சங்கடத்தில்
மாற்றி விடுமோ அல்லது அவர்களின்
கொள்கை பற்றிய விடயமோ அல்லது
உண்மையைக் கூறுவதால் வேண்டாதவை
களையும் வெளிச்சத்திற்கு கொண்டுவர
வைத்து விடுமோ என்ற அச்சமோ! அறி
யேன் விட்டு விட்டார்.

இப் பேச்சாளர் ஒரு இலக்கிய ஆர்வலர்
அவருக்கென்று தனியான பேச்சு நடை
அணுகு முறை என்பன உண்டு. பிராங்-
பேட்டில் நடைபெற்ற ஐந்தாவது இலக்
கிய சந்திப்பில் புலப் பெயர்வு இலக்
கியம் என்னும் பெயரில் ஓர் இலக்கிய
ஆய்வினை மேற்கொண்டார்.

ஆறாவது இலக்கிய சந்திப்பின் தொட
ர்பாளராக இருந்து மூன்று நாட்களுக்கு
அச்சந்திப்பை நடத்தியவர். இவைகளை
விட சிறந்த விமர்சகரும் கூட. கவிதை
களை விமர்சிக்கும் போது அக்கு வேறு
ஆணி வேறாகப் பிரிப்பார். ஜேர்மன்
மொழிக் கதைகளையும் தமிழில் மொ
ழி பெயர்த்துள்ளார். இவ்வளவு சிறப்புத்
தன்மைகள் இருந்தும் அன்றைய நிகழ்ச்சி
யில் இவரின் சிறப்பு இழையோடவில்
லை. காரணம் ஒரு புதிய யுத்தியைக்
கையாண்டதாகக் கூறிக் கொண்டார்.

குற்றங்களைக் கூறாது கஷ்டங்களையும்
சிறப்புக்களையும் கூறி ஆலோசனை
களை வழங்குவது போன்று நடந்து கொ
ண்டதோ அல்லது அவருக்கென்ற தனி
யான பாணியை மாற்றி அன்ன நடை
நடக்கப் போய் தன் நடையையும் இழ
ந்து விட்டாரோ அறிய முடிய வில்லை.
பல கட்டங்களில் சந்திப்பாளர்கள்
சோர்வடைந்து காணப்பட்டார்கள்.
ஒரு முறை ஆற்றாமல் அவரே கேட்டார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஏன் எல்லோரும் மௌனமாக இருக்கின்றீர்கள்"என்று. சில வேளைகளில் கரகோசங்களும் ஆரவாரங்களும் தவிர்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு நடந்து கொண்டாரோ! ஒன்பதாவது சந்திப்பைவிட நன்றாக இருக்கும் என்று எதிர் பார்த்தவர்கள் ஏக்கப் பெருமூச்சுக்களை விட்டதைக் காணமுடிந்தது.

சமுகத் தேவையின் முக்கியமான மாறுதல்களை எழுத்துருவாகக் காவிச்செல்லும் ஒரு பொதுசனத் தொடர்பு சாதனத்தின் உண்மையான தாக்கத்தை ஒழிவு மறைவின்றி எழுத்துக் கூற வேண்டியவர் அதைச் செய்யாது அதன் முக்கியத்துவத்தை தட்டிக் கழித்து ஏனோ தானோ என்ற மனப்பாங்கின் இரட்டைத் தன்மையினையும் ஆசிரியர் குழுவினரையும் வெளியீட்டாளர்களையும் முதுகில் தட்டிக் கொடுப்பதாக எண்ணி தடவிக் கழித்து விட்ட தன்மையையும் என்னென்று சொல்லுவது .

முகமன்,அச்சம், குரோதம் என்ற எச்ச சொச்சங்களிலிருந்து விலகி உண்மையை யார்க்கும் அஞ்சாது முன்வைப்பாரானால் "குற்றங் களைவோர் குறையில்லாதவரே"என்ற சொல்லடுக்குகளின் சிறப்புக்களுக்கு இலக்காகலாம்.

## ஒரு ஆத்மாவின் குரல்

கவிதை- இளங்கோ.

வாழ்வை தியாகம் செய்யவேண்டும்
என் உயிரை கொடுக்கவேண்டும்
ஆயுதத்தால் இரத்தம் சிந்தவேண்டும்
என் முகத்தில் கொடியவர்கள் துப்புவார்கள்
என் கைகால்களை கட்டுவார்கள்
என்னை நையப்புடைப்பார்கள்

என் கன்னத்தில் உதைவார்கள்
பாதாளத்தில் தலைகீழாக இறக்குவார்கள்
உடல் முழுவதும் காயத்தினால் மூடும்
என் உடலில் இரத்த ஆறு ஓடும்
என்னைக் கொண்டு கொடிய வேலைகள்
செய்விப்பார்கள்
என்னை தெருவில் இழுத்துக்கொண்டு
போவார்கள்

முடிவில் என்னை மின்சாரக் கம்பத்தில்
கட்டுவார்கள்
என் கைகளிலும் கால்களிலும் குருதி வடியும்
நான் வேதனையில் துடிக்கும் வேளை வரும்
எல்லோரும் என்னைக்கைவிடும் காலம்வரும்
என்னை விட்டுவிலகிப்போகும் தருணம்வரும்

அப்பொழுதுதான் மக்களுக்கு - ஏன்
போராட்டம் என்று என்னுள் வேதனை வரும்
வெறியருக்கு வைக்கும் முற்றுப் பள்ளிதான்
எங்கள் விடுதலையின் ஆரம்பம்
இதை நினைத்தே என் உடல்
கருவாக மாறுமா? கரியாக மாறுமா?
என் உயிர் ஆத்மாவாக மாறுமா?
இல்லை தேசத்துரோகி என்று [illegible]???

## உலகக்கண்ணாடி-3

### உருகுவேயில் ஆர்ப்பாட்டம்

இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்க முயலும் அமெரிக்காவின் யோசனைக்கெதிராக பரவலாக இலத்தீன் அமெரிக்க மக்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.அண்மையில் இவ்விடயம் தொடர்பாக உருகுவேக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி புஷ்சுக்கு எதிர்ப்பை தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்ததுடன் அமெரிக்க கொடியும் எரிக்கப்பட்டது. உருகுவேயில் உள்ள இடது சாரிக்கட்சிகள் இணைந்து நடத்திய இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஐரோப்பாவிலுள்ள "பேன்ரி அம்பீலோ"என்னும் இடது சாரிக்கட்சியும் இணைந்து எதிர்ப்பை தெரிவித்தது.உருகுவேக்கு வருகை தந்த புஷ் கருத்து தெரிவிக்கையில் சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்குவதினூடாக இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக சூழல்உருவாகும் என்று கூறியுள்ளார். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் ஏகாதிபத்தியத்தின் இன்றைய பிரதிநிதியான புஷ் இவ் எதிர்ப்பை அடுத்து இருபத்திரண்டு மணித்தியாலத்திலேயே இவ்விடயம் தொடர்பாக கதைப்பதிற்கு ஆர்ஜென்டினாவுக்கு பறந்து [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகில இலங்கை அன்னையர் முன்னணி.

ஜின் பிற்பகுதியில் ஈழ விடுதலை பக்கங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏவாக்கவும், சகோதரப் படுகொலை ளுக்கெதிராகவும், இயக்கங்களின் ராஜகங்களுக் கெதிராகவும், பேரின ாத அரசின் ஒடுக்கு முறைகளுக்கெதி ாகவும் போராடுவதற்காக வேண்டி தசிய நலன்களின் அடிப்படையில் தமி பேசும் மக்களின் பாரம்பரியப் பிர தசங்களில் ஸ்தாபிக்கப்பட்ட வெகு ன ஸ்தாபனமே 'அன்னையர் முன்னணி' கும்.

அன்னையர் முன்னணி' என்னும் இவ் வெகு ன ஸ்தாபனமானது விடுதலை இயங்கங் ளில் இணைந்து செயல் பட்டுக் கொண் ருந்த பெண் விடுதலையாளர்கள்



போல் இல்லாது மக்களில் நலன்களின் அடிப்படையிலேயே செயல் பட்டது.

'அன்னையர் முன்னணி' ஆனது எந்த தேசிய இனத்தின் விடுதலைக்காக போராட ஆரம்பித்தார்களோ அதே தேசிய இன த்தின் அராஜகத்துக்கெதிராகவும் 'அன் னையர் முன்னணி' போராட வேண்டிய கடமையை வரலாறு சுமத்தியது.

அராஜகத்தின் உச்சக்கட்ட நிகழ்வான யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜி தரன் கடத்தப் பட்டதும் பின்பு படு கொலை செய்யப்பட்டதுமாக அமைந்

தது. இதற்கெதிராக முன்னெடுக்கப் பட்ட போராட்டமே அன்னையர் முன் னணியின் சுயாதீனமான இறுதிப் போ ராட்டமாக அமைந்தது எனலாம்.

இப் போராட்டத்தினை அடுத்து 86 இன் பிற்பகுதியில் சுதந்திரமான வெகுஜன ஸ்தாபனமாக இயங்கி வந்த 'அன்னையர் முன்னணி'யின் உறுப்பினர்கள் மிரட்டப் பட்டும், வெளியேற்றியும் வெறுமனே அன் னையர் முன்னணி என்னும் பெயர் பலகை க்குள் முற்றுமுழுதான இயக்கத்தின் நலன் களைப் பிரதிநிதித்துவப் படக் கூடிய வர்கள் புகுத்தப்பட்டு அன்னையர் முன்ன ணியின் தூய்மையான செயலாக்கம் மந்தகதிக்கு சென்றது. இவ்வகையான வரலாற்றுப் பாடங்கள் எமது தேசிய

விடுதலைப் போராட்டத்துக்கு கிடைத் துள்ள வேளையிலும் தென்னிலங்கையில் கடந்த 17.02.இல் அன்னையர் முன்னணியி ன் அங்குராப்பன தேசிய மாநாடு நடை பெற்றது. வரலாற்றின் தேவை கருதிய தாகவே அமைந்துள்ளது.

கிட்டத்தட்ட கடந்த ஒண்டரை தசாப் தங்களாக ஏகாதிபத்திய நலன்களுக் கான தரகு முதலாளித்துவ ஆட்சியை நடத்தி வரும் பேரினவாத யூ. என். பி. அரசின் ஆட்சிக்காலத்தில் ஜே.வி. பி. க்கு எதிரான போராட்டம் என்ற போ ர்வைக்குள் கிட்டத்தட்ட பத்து ஆயிரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் பக்கம் உங்கள் பக்கம் உங்

உங்கள் புத்தகத்தை வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இறுதியாக வெளிவந்த இரண்டு, மூன்று புத்தகங்களைத்தான் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் உங்கள் இலட்சிய நோக்கை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை. இருந்தும் உங்கள் இறுதிக்கு முதல் சஞ்சிகையில் வெளிவந்த வன்னியூர் லெனின் எழுதிய "இவர்களும் காவலர்கள்" என்ற சிறுகதை என்னை மிகவும் கவர்ந்து விட்டது. ஈழத் தமிழர்களுக்கு எத்தனையோ விதங்களில் பிரச்சனை நடக்கிறது. அவற்றில் ஒன்றுதான் இது என்பதை தனது சிறுகதை மூலம் அழகாக எமக்கு தெளிவுபடுத்திய லெனினுக்கு எமது பாராட்டுக்கள். ஈழத்தமிழர்கள் அனுபவிக்கும் ஒவ்வொரு பிரச்சனைகளையும் லெனின் போன்றோர் சிறுகதை மூலமாக எமக்கு அளித்தால் நன்றாக இருக்கும் என எண்ணுகிறேன். தெளிவில்லாமல் வந்த சிறுகதையை எனிவரும் இதழ்களில் பிரசுரித்தீர்களானால் முழுமையும் தெளிவும் பெறும் என எண்ணுகிறேன். இறுதியாக வெளிவந்த சஞ்சிகையின் எழுத்துத் தெளிவைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். வெகுஜனம் சிறப்படைய எனது வாழ்த்துக்கள்.

பொன்ராசா
ஈடார்ஒபஸ்ரயின்.

ஆசிரியர் குழுவினருக்கு,

உங்கள் சஞ்சிகைகளைப் பார்த்தேன். கடைசியாக வந்த புத்தகம் வடிவாக இருந்தது. ஆனால் வெளிநாட்டுப் பிரச்சனையே நிறம்பஇருந்தது. "இணைப்புக்குள் ஒரு ஆப்பு" என்று எழுதியிருந்தது நன்றாக இருந்தது. முஸ்லீம்களை பிரித்து வைத்து விட்டீர்களோ என்ற சந்தேகமும் வந்தது. புத்தகத்தின் பின் மட்டையில் ஐக்கியப்படுவோம் போராடுவோம் அமைதி காண்போம் என்று எழுதியிருந்தீர்கள். அதற்கு அர்த்தம் தான் விளங்கவில்லை சந்தி அரசியலில் போட்ட படம் ஏதோ இலங்கை பேப்பரில் பார்த்தது போல் இருக்கு இதற்கு முதல் வந்த புத்தகத்தை பார்க்க. EPயின்ர புத்தகம் மாதிரி கிடந்தது. கனக்க இயக்கத்தைப் பற்றி எழுதியிருந்தீர்கள். கவிதை எல்லாம் போட்டு இருந்தீர்கள். கதையும் ஒன்று எழுதியிருந்தீர்கள். யார் EPயா ஆனந்து என்ற பெடியனை பிடித்து வைத்திருக்கிறார்கள். களவு எடுப்பவர்களுக்குத்தான் களவை எப்படி பிடிப்பது என்பது தெரியும். அதைவிடுங்கோ ஒருக்கா EPபுத்தகம் மாதிரி எழுதுகிறீர்கள், ஒருக்கா சோசலிச காரரர் போல எழுதியிருக்கிறீர்கள். ஒருக்கா நல்லா எழுதியிருக்கிறீர்கள். நீங்கள் என்ன பச்சோந்திகளா (நிறம் மாறுகிற ஓணான்)

மு. சுப்பையா,
காஸ் (KAAL)

இறுதியாக வெளிவந்த வெகுஜனத்தை வாசித்தேன். வாசித்துக் கொண்டிருக்கும் போதே எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. மீண்டும் முன் மட்டையை திருப்பிப் பார்த்தேன். ஆம் வெகுஜனம் தான். எனது சந்தேகம் என்னவென்றால் வெகுஜனத்திலா இவ்வளவு தெளிவான எழுத்துக்களை காண முடிகிறது என்பது தான். தரமான அமைப்பை சஞ்சிகைக்கு வழங்கிய ஆசிரியர் குழுவினருக்கு எனது பாராட்டுக்கள். ஆரோக்கியமான கருத்துக்களைக் கொண்ட வெகுஜனம் இவ்வளவு காலமும் தெளிவற்ற எழுத்துக்களால் ஜனங்களுக்கு பிரகாசத்தை வழங்க முடியாமல் இருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்ததனால் திடீர் வளர்ச்சியொன்று வெகுஜனத்திற்காகக் காத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அட்டைப்படம் (தெளிவின்மையால்) சஞ்சிகையின் தரத்தைக் குறைப்பதாகவே இருந்தது. அன்னிய நாட்டு விவகாரங்களே அதிகமாகக் காணப்பட்டதும் ஒரு குறையாகவே இருந்தது.

என்ன சொல்லுகிறார்கள் என்னும் பகுதிக்குள் இலக்கிய சந்திப்பிற்கு முதலிடம் வளங்குவது அவ்வளவு நன்றாக இல்லை. எம்மைப் போன்றவர்களுக்கு சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போல் [illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைகள் போல்த்தான் அங்கும் ஏதும் நடக்கிறதோ என்ற ஐயப்பாட்டையும் தோற்று விக்கிறது.உங்கள் பக்கத்தினூடாக தனது அனுபவத்துடன் கூடிய சிந்தனைச் சிதறல் களை எம்முடன் பகிர்ந்து கொண்ட என். விஜயலட்சுமிக்கும் எனது பாராட்டுக்கள். வன்னியூர் லெனின் எழுதிய "இவர்களும் காவலர்கள்"போன்ற ஈழச்சிறுகதைகளைத் தொடர்ந்து பிரசுரித்தால் வெகுஜனம் என்னும் சிறப்படையும்.அன்னிய நாட்டுப்பிர ச்சனைகளை உலகக் கண்ணாடிக்குள் அடக்கினால் நன்றாக இருக்கும். சங்கரப்பிள் ளையரின் முகவரியை அனுப்புவீர்களானால் நானும் அரசியல் கதைக்கலாம் போல் இருக்கிறது. வெகுஜனம் மென்மேலும் வளர்ச்சியடைய எனது பாராட்டுக்கள்.

ஸ்ரீபானு.
கூசைப்பிள்ளையார்குளம்
இலங்கை.

இம்முறையும் வெகுஜனம் நல்லம்சங்களுடன் வந்திருக்கின்றன.ஆனால் என்னால் பல வெ குஜனங்களில் காணக்கூடியதாகவிருந்த விடயம் கருத்துச் செறிவு மிதமிஞ்சிய சில சொற்பதங்கள்.அதாவது சமூக விஞ்ஞானிகள் என்று தம்மைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் காலத்துக்கொவ்வாத கற்பனாவாதிகள் பாவிப்பது போன்றகடுமையான

சொற்பதங்கள்.எனக்குத் தெரியும் அவர்கள் அதனைப் பாவித்தது தங்களை மேதாவி களாக காட்டுவதற்காக.ஆனால் வெகுஜனம் அப்படியல்ல. அரசியல் தத்துவார்த்த ரீதியான சொற்களாகஅவை இருந்தாலும் அரசியல் இலக்கிய மாத சஞ்சிகையாக சாதாரண மக்கள் மத்தியில் செல்லும் போது எங்கள் கருத்துக்களை கூடிய மட்டில் எளிய முறையில் தெரிவிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனெனில் இந்தப் பத்திரிகை வாசித்தாலே விளங்காது என ஒருவரும் சொல்லக் கூடாது. அச்சொற் களைப் பாவிப்பது தவறென்று நான் சொல்ல வரவில்லை. எளிய சொற்கள் இன்னும் பாதிப்புள்ளதாய் இருக்கும்.
உதாரணத்திற்கு-பௌத்த பேரினவாத தரகு முதலாளித்துவ ஆளும் தலைமை என்பது சிங்கள அரசுகளுக்குப் பொருத்தமான சொற்றொடரே.ஆனால் இதனைச் எளிமைப் படுத்திச் சொல்ல முடிந்தால் நன்றாக இருக்கும். இயங்கியல் என்பது அனேகருக்கு நடைமுறை யதார்த்தம்(PRACTICAL)என்பது தெரியாது.இவ்வாறான சொற்பதங்கள் தவி ர்க்க முடியாத சந்தர்ப்பம் தவிர்த்துத் தவிர்க்கப்பட்டால் வாசகர் கருத்துக்களை இன்னும் புரிந்து கொள்வார்கள் என்பது என்னுடைய கருத்து."இணைப்புக்குள் ஒரு ஆப்பு" நன்றாக எழுதப்பட்டிருந்தது.உலகச் செய்திகள் தலைப்பில் இந்திய அரசியல் வாதி கள் பற்றியும்,பிரித்தானிய பிரதமர் பற்றியும் ஜேர்மன் அரசியல் நிலைமைபற்றி யும் எழுதியிருப்பது வாசகர்களுக்குப் பயனுள்ளது.இலக்கியச் சந்திப்பில் வாசிக்கப் பட்ட "உலகியல் ஒப்புநோக்கில்"எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி செறிவான காரணிகளைக் கொண்டு எழுதப்பட்டிருப்பது அக்கட்டுரைக்கு எனது ஒரு "சபாஷ்". மலையகத்தை யாவரும் மறந்த நிலையிலும் வெகுஜனத்தின் மலையகம் பற்றிய எழுத் தும் மறந்து பட்டவர்களை நினைவு கூருவதும்,தெரியாதவர்களைத் தெரியப்படுத்தும் பணியும் மேலும் தொடர வேண்டும்.

வி.போல்
அயர்லாந்து.

வெகுஜனத்தை தொடர்ச்சியாக வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கடைசி யாக வந்த சஞ்சிகை பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருந்தது. சிறுகதையும் கவிதை களும் இல்லாதது குறையாக உள்ளது. மக்களின் விடிவுக்காக தம்முயிரை அர்ப்பணி த்து போராடும் ஈழப் போராளிகளை இவ்வளவு இழிவான முறையில்"இவர்களும் கா வலர்கள்"என்ற பெயரில் கதை எழுதியவர் யார்?இது மன்னிக்க முடியாத தண்டனைக் குரிய குற்றமாகும்.

சிவா
பிராங்போர்ட்.

www.tamilarangam.net

கார்த்திகை,மார்கழி வெகுஜனம் பார்த்தேன். உலகக்கண்ணாடி, சங்கரப்பிள்ளையரின் சந்தி அரசியல்,எமது எண்ணங்கள் போன்றவை சிறப்பாக இருந்தன. வி. போல் எழுதிய "நிக்கரக்குவாவும் சண்டினிஸ்டுகளும்"என்னும் கட்டுரையில் இருந்து பல விடயங்களை அறியக்கூடியதாக இருந்தது. "இவர்களும் காவலர்கள்"போன்ற சிறப்பான சிறுகதைகள் இம்முறையும் வந்திருக்கும் என எண்ணி சஞ்சிகை முழுவதும் தேடினேன்.ஆனால் கிடைக்கவில்லை,தனது மனதில் எழுந்ததை எளிமையான முறையில் சிறுகதையாக எமக்குத் தந்த லெனினுக்கு எனது பாராட்டுக்கள்.அரசியல் இல்லாத ஆயுதக் கும்பல்களில் பாசிசத்தின் வேர்கள் மிகச் சுலபமாகவே பற்றிக் கொள்ளும் என்பதை நினைவு படுத்துவதாகவே இச் சிறுகதை இருந்தது. லெனின் போன்ற எழுத்தாளர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தும் வெகுஜனத்திற்கு எனது பாராட்டுக்கள்.மற்றும் "உலகியல் ஒப்பு நோக்கில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி" எனும் ஆய்வுக் கட்டுரையும் சஞ்சிகையை சிறப்படையச் செய்வதாகவே இருந்தது. "குறிஞ்சிக் குறைகள்" எனும் பகுதி நல்லதொரு விடயமாகும்.

தே.தமிழினி (கனடா)

எம் நாட்டில் எம் மக்கள் பசி பட்டினியால் தவிக்கும் இக்கால கட்டத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என பல புத்தகங்கள் இங்கு வெளியிடுகிறார்கள். பலர் உதவிக்குஎன இங்குள்ள தமிழர்களிடம் பணம் வேண்டுகின்றனர்.அவர்களில் முதலிடம் புலிகளுக்கே.இவர்கள் மக்களுக்கு பணம் பணம் என இங்குள்ள தமிழர்களிடம் பணம் வேண்டுகிறார்கள்.சிலர் பயத்தில் கொடுக்கிறார்கள்.சிலர் திரும்ப நாடு சென்றால் பயம் இல்லாமல்(புலிகளால்)வாழ்வதற்காக பணம் கொடுக்கிறார்கள். சிலர் விரும்பிக் கொடுக்கிறார்கள்.(விருப்பிக் கொடுப்போர் குறைவு)சிலர் புலிகள் கட்டாய படுத்தி கொடுக்கிறார்கள்.ஆனால் சிலர் இங்கு வந்து பல வருத்தங்களால் பீடிக்கப்பட்டு வேலை செய்ய முடியாமல் சோஷல் பணத்தையே நம்பி அதில் மிச்சம் பிடித்து தம் உறவினருக்கு(இலங்கைக்கு)அனுப்புகிறார்கள்.ஆனால் புலிகள் புலி ஆதரவாளர்கள் மாதம் மாதம் இந்த நோயாளிகளிடமும் சென்று பணம் வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.அவர்கள் தங்கள் நிலையை சொன்னால் தங்கள் கொள்கை,நாங்கள் செய்யும் உதவியென பல தத்துவங்கள் சொல்லியும்,அவர்கள் பணம் தர மறுத்தால் உங்களைப்பற்றி அங்கே புலிகளுக்கு(இலங்கை)அறிவிப்போம் என்று கூறுகிறார்கள்.ஆனால் பணம் படைத்தவர்கள் எடுத்ததற்கெல்லாம் விருந்து என்று கும்மாளம் அடிக்கிறார்கள்.அந்த விருந்துக்கு புலிகள் அல்லது புலி ஆதரவாளர்களையும் அழைக்கிறார்கள்.அவர்களும் சென்று மதுபானம் டிஸ்கோ கிளப்பென்று சந்தோஷமாக கழிக்கிறார்கள்.ஆனால் கஷ்ரப்பட்டவர்களிடமும் மாதம் ஒரே அளவு பணம். பணம் உள்ளவர்களிடமும் அதே அளவு பணம் வேண்டுகிறார்கள்.

அதே சமயம் இங்கு பணம் கொடுக்கும் ஆளின் உறவினரிடம்(இலங்கையில்)பணம், நகை என வேண்டுகிறார்கள்.இவர்கள்(புலிகள்)இங்கு வேண்டும் பணம் அங்கு(இலங்கைக்கு)போய் சேருகிறதா என்பது தெரியாத புதிர்.இவர்கள் கணக்காலம் இருக்க மாட்டார்கள்.அவர்களுக்கு புளொட் அல்லது ஈ.பி.ஆர்.எல்.எவ்.இவர்கள் தான் பதில் சொல்ல முடியும் என நினைக்கிறேன்.அல்லது அவர்களும் பயந்து இருந்து விடுவார்களோ இப்படி சில குடும்பகாரர் கதைக்கிறார்கள்.இவர்கள் கதை எப்படி முடியும் என்று பலர் எதிர்பர்க்கிறார்கள்.இதில் சிரிப்பான விடயம் புலிகள் தான் இந்நாட்டு மன்னர்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள்.ஆனால் புலிகள் பணம் கேட்டு வருகிறார்கள் என்றதும் பின் கதவைத்திறந்து ஓடுகிறார்கள் புலிபக்தர்கள்.

என்.வி ஜெயலட்சுமி
ஸ்ருக்காட்.

ஜேர்மன் சர்வாதிகாரி கிட்லருக்கு ஒப்பிட்டு ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபாவை வர்ணித்து நடராஜன் என்பவர் ஒன்பதாவது இலக்கிய சந்திப்பில் பேசியதாக என்ன சொல்கிறார்கள் என்றும் பகுதியில் எழுதியுள்ளீர்கள். நான் ஒரு கிறீஸ்தவன் என்ற முறையில் பைபிளிலிருந்து சில விடயங்களை எழுதவிரும்புகிறேன். மக்களின் சுபீட்சத்திற்காக பாடுபட்ட ஜேசு நாதரை குற்றவாளியாக்கி மரணதண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னார்கள்.கொள்ளைக்காரனான பரபாஸ் என்பவனையும் சிலுவையில் அறைய தீர்ப்பு
கூறியிருந்தார்கள்.ஜேசு நாதரையும் பரபாசையும் மக்கள் முன்னிலையில் கொண்டு
வந்து.இருவரில் ஒருவரை விடுதலை செய்யலாம்.யாரைவிடுதலை செய்ய வேண்டும்.
கொள்ளைக்காரன் பரபாசையா?சமுகத்துரோகி ஜேசுவையா என்று கேட்டார்கள்.
பொய்ப் பிரச்சாரங்களால் மதி கெட்டுப் போன மக்கள் பரபாசை விடுதலை
செய்யுங்கள்.சமுகத்துரோகி ஜேசுவை சிலுவையில் அறையுங்கள் என்று கூக்குரலிட்டா
ர்கள். ஜேசு ம்க்களுக்காக பாடு பட்டமைக்காக இரத்தம் சிந்தினார்.இன்று மக்கள்
ஜேசு நாதரை தேவ தூதன் என்று போற்றி வழிபடுகிறார்கள்.இரண்டாயிரம் வருட
ங்களுக்குப்பின்பும் நடராஜன் போன்றவர்கள் பரபாசை போன்ற அராஜக வாதிக
ளை நல்லவர்கள் என்றும் மக்களுக்காக இரத்தம் சிந்திய பத்மநாபாவை கிட்லருக்
கு ஒப்பாக பேசுவதையும் பார்க்கும் போது நமது சமுகம் இரண்டாயிரம் வருடங்
கள் பின் தங்கியுள்ளது என்றும் வேதனை எழுகிறது.
வரலாறு பரபாஸ் யார்?பத்மநாபா யார்?என்பதை நிரூபிக்கும்.மூன்று வேளை வயிறு
முட்ட உண்டு பொழுது போக்குக்கு நரம்பில்லா நாக்கால் வந்த படி யெல்லாம்
பேசும் நடராஜன் போன்றோர் மக்களுக்காக வாழ்ந்து மக்களுக்காக மடிந்த பத்ம
நாபாவை இப்படித்தான் பேசுவார்கள். இது ஒன்றும் உலகுக்கு புதிதல்ல.

தேவசகாயம்.FRANCE


பழ-கருப்பையா.

# குறிஞ்சிக் குறைகள்

தொழிலாளர்களின் பண்டிகைக்கால முற்பண
த்துக்கான கொடுப்பனவுகளுக்கு தொழிலாளர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து
எழுபத்தைந்து ரூபாவை அறவிடுவதன் ஊடாக பண்டிகைக் காலத்துக்கான முற்பண
மாக மேலதிகமாக பெருந் தோட்ட நிர்வாகம் கொடுக்கவேண்டிய தேவையிரு
காதுஎன்றும்.தொண்ணூற்றோராம் ஆண்டுக்கான வரவுகால போனசிலிருந்து அற
விடுவதும் துண்டு விழும் தொகையை தொழிலாளர் வேதனத்திலிருந்தும் அறவிடத்
தீர்மானித்தனர்.

கடந்த வருடம் வழங்கப்பட்ட பண்டிகைக் காலமுற்பணத்திற்கான மாதாந்த கழி
வாக அறுபது ரூபாவை தை - மாசி மாதங்களில் அறவிடாது மொத்தமாக பங்குனி
மாதத்தினில் நூற்றியெண்பது ரூபாவாக அறவிடுவதெனவும் இச்சுரண்டல் கூட்டங்க
ளால் தீர்மானிக்கப்பட்டது. இது துரோகத் திட்டத்தை எதிர்த்து இடதுசாரி
தொழிற்சங்கங்கள் யாவும் இணைந்து மலையகத்தில் ஒருநாள் வேலைநிறுத்த போ
ராட்டத்தில் இறங்கினர்.

இவ்வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பாக இ.தொ.காங்கிரஸ் விட்ட அறிக்
கையில், தாம் இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லையென்றும்,
இந்த ஒருநாள் போராட்டத்தினால் ஒரு நன்மையும் பெறப்போவதில்லை, மாறாக
ஒரு நாள் ஊதியத்தையும் தொழிலாளர்கள் இழக்கவேண்டி வரும் எனமிரட்டியுள்ளனர்

ஆனால் இடதுசாரி தொழிற்சங்கங்கள் இணைந்து விடுத்த வேண்டுகோளை ஏற்று
சுமார் இருநூற்றி அறுபத்தாறு தோட்டங்களைச் சேர்ந்த மூன்றுஇலட்சம் பேர்
(தொண்ணூறு வீதமானோர்) இவ் வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டு தொண்ட
மான் கூட்டத்தினருக்கும், சுரண்டல் அரசுக்கும் முகத்தில் கரி பூசியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊத்தினது காணும் எண்டு நினைச்சுக் கொண்டு பானையை வைச்சுப் போட்டு பாக்கை வாயுக்குள்ளை போட்டு மெண்டு கொண்டு வெத்திலையிலை சுண்ணாம்பை தடவியவாறு வாத்தியாரின் தறை வரம்பிலை அறுகம்புல்லிலை படிஞ்சிருந்த பனித்தண்ணியை காலாலை தட்டிப் போட்டு உள்ளங்கையை ஊண்டியானை சரியிற மாதிரி மெதுவாக உட்கார்ந்தார் சங்கரப்பிள்ளையர்.

என்ன வாத்தியார்
சப்பை கொட்டுறியள். வாயைத் திறவுங்கோவன்

சிரிச்சுக் கொண்ட வாத்தியார். பிள்ளையர் பூனை அறுகம்புல்லை தின்னிறதைப் பார்த்திருக்கிறீர்தானே. செமியாக்குணம் வந்தால் அது மாற வேணுமெண்டிறதுக்காக அறுகம்புல்லை பூனை தின்னும். அதை வைச்சுக் கொண்டு பூனை எலிபிடிக்கிறதை விட்டுட்டு அறுகம் புல்லை தின்னுது தின்னும் எண்டு சொல்ல முடியுமோ அப்பிடித்தான் இதுவும் காணும்.

என்ன வாத்தியார் ஐயருக்கும் அமாவாசைக்கும் முடிச்சுப் போட்ட மாதிரி பொடியள் சண்டையை நிப்பாட்டினதுக்கும். செமியாக்குணத்துக்கு பூனை அறுகம்புல்லை தின்னிறதுக்கும் முடிச்சு போடுறியள்.
எண்ட பிள்ளையர் சில நேரத்திலை வாத்யாருக்கு ஒண்டும் விளங்கிறதில்லை எண்டு மனசுக்குள் நினைச்சு சிரிச்சுக் கொண்டார்.

பிள்ளையர் நான் சொல்லுறதிலை விசயமிருக்கு.இந்த சண்டை தொடங்கி கிட்டதட்ட பத்து வருசமாகப் போகுது. இன்னும் உங்களைப் போல சனங்கள் நல்லது கெட்டதை விளங்கிக் கொள்ளாமல் இருக்கிறதும். பொடியள் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் சரியாய்தான் இருக்குமெண்டு நம்பி தலை யாட்டுறதும்.நேற்றைக்கு நடந்ததுகளை அறணைமாதிரி மறந்துபோட்டு இண்டைக்கு உள்ளதை மட்டும் கதைக்கிறது. இதுகள் எல்லாம்தான் உங்களை ஆட்டிப்படைக்கிறவைக்கு வாசியாய் இருக்கு.

உங்கடை கதையைப் பார்த்தால் எங்

மாதிரியெல்லோ கிடக்கு வாத்தியார்.
நான் அப்பிடிச் சொல்ல வரேல்லை ஆனால் நாலுதரம் பசிக்கு கோழி களவெடுத்தவனை கள்ளன் எண்டு நம்புறநீங்கள். தாங்கள் மட்டுமே பதவிக்கு வரவேணும் எதிர்த்து கதைக்க ஒருத்தரும் இருக்கக் கூடாது எண்ட பாணியிலை துவக்கை காட்டி அட்காசம் பண்ண பத்து வருசமாய் காரணமில்மல் ஆயிரக்கணக்கிலை கொலையளை செய்யிறவையை நீங்கள் விளங்கிக் கொள்ள மறுக்கிறது ஏன் எண்டுதான் விளங்கையில்லை பிள்ளையர்.

கெக்கட்டம் விட்டுச் சிரிச்சுக் கொண்ட பிள்ளையர். வாத்தியார் மழுப்ப பார்க்கிறார்எண்டு நினைச்சுக் கொண்டு.
வாத்தியார் விசயத்துக்கு வாங்கோ நான் கேட்டதை விட்டுட்டு வேறெங்கையோ போறியள்.வட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால் சதுமலைக்கு பாதைகாட்டுறியள்.

கிருபானந்தவாரியாரின்ரை பிரசங்கம் கேட்டிருக்கிறீரோ? அதுமாதிரி உமக்கு விளங்குறதுக்காக கொஞ்சம் சுத்தி வந்தனான். ஆனால் விசயத்தை விட்டு வெளியிலை போகவுமில்லை நீர் நினைக்கிற மாதிரிமழுப்பவும் பார்க்கயில்லை எண்டவாறு சிரிச்சுக் கொண்ட வாத்தியார் தக்காளிக் கருகில் இருந்த புல்லை சாறியெடுத்து மண்ணை உதறிவிட்டு புல்லை வரம்பில் எறிஞ்சார்.

பிள்ளையருக் திக்கெண்டது.நான் நினைச்சதை மந்திரவாதி மாதிரி என்னெண்டதான் இந்தாள் டக்கெண்டு சொல்லுதோ தெரியேல்லை.

பிள்ளையர் இந்தப் பொடியள் தங்களுக்குத் தேவையெண்டால் பேச்சுவார்த்தை செய்வம் சண்டை நிப்பாட்டிறம் என்கினம். பிரமதாசா நல்லவர் நம்பத்தகுந்தவர் என்கினம் மாகாண சபை பரவாயில்லை என்கினம். அதை அரசியல் தந்திரோபாயம் என்கினம். எல்லாம் பிழைச்சு போச்சுதெண்டால். பிரேமதாசா துரோகி தொடர்ந்து சண்டைதான் தமிழீழம் தான் இறுதி முடிவென்கினம். இந்தச் சூத்திரத்திலை தங்கடை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல்,

ஆனா



பனிப்புகார் நிறைந்து வயல் வெளி எங்கும் ஒரு இளம் இருட்டாக இருந்தது. சூரியன் மெதுவாக தலையைக் காட்ட தொடங்கிய அதிகாலை வேளை குளிருடன் கூடிய காற்று மெதுவாக வீசியும் வீசாமலும் ஊர்ந்து கொண்டு உடம்புக்கு ஒரு வித சுகத்தை கொடுத்துக் கொண்டிருந்தது. பிள்ளையர் கிணத்துக்குள் வாளியை ஒரு குத்துக் குத்தி தண்ணியை நிறைத்து இழுத்தெடுத்து இரண்டு பானைகளிலும் நிறைத்து தூக்கி வரப்பில் யானை நடப்பது போல் அசைந்து கொண்டிருந்தார். இந்த இளம் குளிருக்குள் இலகுவாக பிள்ளையருக்கு வியர்த்தது.

என்ன பிள்ளையர் வீட்டில கிடக்கிற காசு போதாதே பாஞ்சு பாஞ்சு உழைக்கிறீர் என்றவாறு தலையில் தலைப்பாகையுடனும் வலப்பக்க தோளில் மண்வெட்டியுடனும் மடித்துக் கட்டிய நாலுமுழத்துடன் பிள்ளையருக்குப் பின்னால் வந்த வாத்தியார் குரல் கொடுத்தார். திரும்பிப் பார்த்த பிள்ளையருக்கு வாத்தியாரின் நளினம் பிடிக்கவில்லையாயினும், ஒரு கிழமையாய் காணாத வாத்தியாரைக் கண்டதில் புதினம் அறியலாம் எண்ட குஷி.

அது சிரி வாத்தியார் உந்த நக்கல், நளினம், சன்னை, சரசம்தானே வேண்டாமென்கிறது. என்ர வீட்டு நாய்க்குப் போட்டால் கூட இந்தக் காசைத் தின்னாது. ஒரு வயிறு சாப்பாடு ஆறஅமரச் சாப்பிட்டு வருஷக் கணக்காகப் போகுது. போன கிழமை கனநாளைக்கு பிறகு ஒட்டு நண்டு வாங்கிச் சமைச்சன். வாசம் மூக்கை துளைச்சுது. வாயிலை நீர் ஊறெடுத்துது. சோத்தை போட்டு கறியை விட்டிட்டு சாப்பிட வைக்க சிதறுவாற்றை பொம்பர் சத்தம் கேட்டுது. அப்படியே போட்டிட்டு பங்கருக்குள்ளை ஓடிவிட்டம். இரண்டு மணித்தியாலம் கழிச்சு வந்து பாத்தா நம்ம வீட்டு நாய் இரசிச்சு ருசிச்சு சாப்பிட்
டிக் கொண்டு படுத்திருக்கு. அந்த நாய்க்கு கொடுத்து வைச்சளவுக்கு எங்களுக்கு கொடுத்து வைக்கேல்லை. அதுதான் பாத்திட்டு என்ரை நாலூறு கண்டு நிலத்திலையும் கொஞ்ச கத்தரி, கொஞ்ச தக்காளி, பலத்தை எண்டு வைச்சிருக்கிறன். பின்னடியிலை மரவள்ளி ஊண்டப்போறன் நம்கைதான் நமக்குதவி.

வாத்தியார் தக்காளிக்குள் இறங்கி மெது சாறல் சாறத்தொடங்கினார். பிள்ளையர் தண்ணீரை ஊற்றியவாறு என்னவாம் வாத்தியார் சண்டை நிறுத்தமாம். பொடியள் விட்டாலும் போக்கறுத்த ரஞ்சன் விடான் போலகிடக்கு. நெடுக பொடியளைக் குறை சொல்லுவியள். இப்ப இதுக்கு என்ன சொல்லுறியள் பொடியள் சண்டையை நிப்பாட்டுவம் எண்டால் கவுண்மெந்து சம்மிதக்குதில்லை. பொடியள் செய்யிறது சரி போலத்தான் கிடக்குது.

வாத்தியார் ம் ------ம்---------- எண்டு சப்பை கொட்டிக் கொண்டார்.

பிள்ளையருக்கு வாத்தியாரை மடக்கிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவையைத்தான் பார்க்கினமே ஒழிய சனங்களைப்பற்றி எப்பவாவது யோசிச்சினமோ எண்டு ஒருக்காவாவது உங்கடை மூளையை சலவைக்கு போட்டு வெளுத்து பார்த்திருக்கிறியளோ?ஆராவது வேற பொடியள் சனங்களுக்குஏதாவது நல்லது செய்ய வந்தால் அவங்களை துரோகியள் எண்டு பொட்டு வைக்கிறதை ஏன் எண்டு விளங்கியிருக்கிறியளோ? இதுகளை விளங்க முயற்சியுங்கோ இந்த சண்டை. நிற்பாட்டல் ஏன் எண்டு தானாய் விளங்கும்.

அப்பிடியெண்டால் இப்ப பொடியள் சண்டை நிப்பாட்டியிருக்கிறது சனங்களுக்கு நன்மையில்லை. பொடியள் தங்கடை தேவைக்குதான் நிப்பாட்டினவங்கள் எண்டோ சொல்லுறியள். எண்டு வாத்தியாரை மடக்கிற மாதிரி ஒரு போடு போட்டார் பிள்ளையர்.

நான் அப்பிடிச் சொல்ல வரயில்லை பிள்ளையர். சண்டையில்லாட்டில் சனங்களுக்கு மூச்சு விடவாவது நேரம் கிடைக்கும். உமக்கும் நண்டுக்கறி சாப்பிடலாம்.

பிள்ளையருக்கு கோபம் பொத்திக் கொண்டு வந்தது. திரும்பவும் சொல்லுறன் நக்கல் வேண்டாம்.

சிரிச்சுக் கொண்ட வாத்தியார். கோவிக்காதையும் பிள்ளையர் விசயத்துக்கு வருவம். தேவையில்லாமல் தொடங்கின சண்டையிலை இண்டைக்கு வரைக்கும் கிடைச்ச லாபம் என்ன? லாபம் இலலாட்டி ஏன் சண்டை பிடிச்சவை ? லாபம் எண்டா ஏன் சண்டையை நிப்பாட்டுகினம்?

திடீரெண்டு ஒருதலைப்பட்சமாய் சண்டையை கூடாதெண்டு நினைச்சு நிப்பாட்டிறதுக்கு.புத்தருக்கு போதி மரத்திலை ஞானம் வந்த மாதிரி இவையருக்கு எந்த மரத்துக்கு கீழை ஞானம் வந்தது?

இவ்வளவு நாளும் போராட்டமெண்டால் சனங்கள் சாகிறது தவிர்க்கேலாதெண்டவையை நீர் எப்படி நினைக்கிறீர்சண்டையை நிப்பாட்டினது சனங்களின்ரை நன்மைக்குதானெண்டு.

வாத்தியார் சொல்லுறதை ஆவெண்டு கேட்டுக் கொண்டிருந்த பிள்ளையர்.

அப்பிடியெண்டால் இப்ப என்னதான் சொல்லுறியள் வாத்தியார்?

பிடிச்சுக் கொண்டு போன பால்குடியளின்ரை எண்ணிக்கை குறைஞ்சு போயிருக்கும்,துவக்குகளும் சன்னங்களும் முடிஞ்சு போயிருக்கும்,துவக்கு வந்த பாதை எங்கேயோ அடைபட்டுபோயிருக்கும் அதுதான் யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை எண்டு பழைய பல்லவியை பாட தொடங்குகினம்.

அப்ப வாத்தியார் இதெல்லாம் பம்மாத்து எண்டோ சொல்லுறியள். குறைஞ்சதும் முடிஞ்சதும் நிறைஞ்சா திரும்பவும் வாண வேடிக்கைதான். இப்ப நீர் போய் தண்ணியை ஊத்தும் என்றவாறு வாத்தியார் சாறத் தொடங்கினார்.

இந்த மனுசனோடை கதைச்சாலே மண்டையைக் குழப்பிப் போடும் என்று நினைத்துக் கொண்ட பிள்ளையர் தண்ணியை ஊத்த பானையை தூக்க அடி அசைந்து கொண்டு போனார்.

37ம் பக்கத்தொடர்ச்சி-------

தொழிலாளர்களின் பல வகையான இரத்தம் சிந்திய போராட்டங்களினூடாக கிடைத்த சலுகைகளைக்கூட பெருந்தோட்ட நிர்வாகங்களுடன் சேர்ந்து தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் நடவடிகைகளுக்கு ஒத்தழைத்ததோடு நின்றுவிடாது இச்சலுகைகளுக்காக போராடமுற்படும் ஏனைய தொழிற்சங்கங்கள் ஒவ்வொன்றும் தோட்டங்களில் இருபத்தைந்து வீதமான தொழிலாளர்களைப் பிரதிநித்துவப்படுத்த வேண்டும் என்ற அரசின் ஜனநாயக விரோத திட்டங்களுக்கும் ஒத்துழைத்தது இந்த இ.தொ.காங்கிரசாகும்.

அரசின் இவ்வகையான ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக் கெதிராகவும், மலையகமக்களின் சலுகைகளைப் பறித்தும் உரிமைகளை மறுத்தும்வரும் அரசுடன் ஒத்துழைக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சுயநலநோக்கங்களுக் கெதிராக உறுதியுடன் போராட மலை [illegible] ணிக்கு மேலும் வலுவூட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களோடு சிலநிமிடம்.

பீற்றர்குலம்.
LANGEN FELD

ஜேர்மன் வாழ் தமிழ் அன்பர்களே! உங்களோடு வெகுஜனம் வாயிலாக என்கருத்துக்களையும் எண்ணங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகவும் பெருமைப்படுகிறேன். ஜேர்மன் முழுவதும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்தாலும், தாயகத்தில் நடப்பதை தெரியாது கூடசிலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர்தெரிந்திருந்தும் நடப்பவைகள் நடக்கட்டும் நாம் நிம்மதியாக வாழ்ந்தால் போதுமென பலரும் கருதுகின்றனர். இன்னும் சிலர் இவர்கள் மற்றயவர்களை விட வித்தியாசமானவர்கள். இங்கு வாழுகின்ற மக்களை ஏமாற்றி பணம் பறிப்பவர்கள். அங்கு நடக்கின்ற நிகழ்வுகள் உண்மையாக இருந்தும் பொய்மை கருத்துக்களையும் தொலைபேசிமூலம் கூறி மக்களை தூங்கவைப்பதுமே இவர்கள் கொடுக்கும் செய்திகளாகும். அதைவிட இங்கு வெளி வருகின்ற சில தமிழ் சஞ்சிகைகளில் கூட உண்மைக்கு புறம்பான கருத்துக்களே வருகின்றன. இலங்கைவாழ் தமிழ் மக்கள் தங்கள் ஈழநாடு முழுமையாக விடுதலை பெற்றால் ஒழிய தங்களுக்கு வாழ்வில்லையென்பதை அன்றும் இன்றும் உணர்ந்திருக்கிறார்கள். அறவழியில் பெறமுடியாதென்பதை கடந்த முப்பதாண்டு கால அனுபவம் அவர்களுக்கு உணர்த்தி'யுள்ளது. சமரச பேச்சுக்கள் எம்மை சுதந்திர மனிதர்களாக்காது என்பதையும் அம்மக்கள் புரிந்திருக்கிறார்கள். ஆகவே இவ்வளவு அழிவு இவ்வளவு இழப்புஆயிரக்கணக்கான தோழர்களின், மக்களின் அழிவுகளுக்குபின் ஒரு போதும் பின்வாங்கமுடியாது. விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதை தவிர வேறு வழியில்லை என்பதை அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு தமிழ்பேசும் மக்களும் உணர்ந்துள்ளார்கள். நாம் விரும்புவது உண்மையான நிரந்தரமான ஒருமைப்பாட்டையே. இன்று எமது மக்களுக்கு பாதுகாப்பு யார் என்பது கேள்விக்குறியாக உள்ளது. எம்மினம் பலபிரிவுகளாக பிரிந்து செயல்படுவதும், நான்காவர் காட்டிக்கொடுப்புந்தினம் தினம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. உண்மையான விடுதலைக்காக உழைத்த பலர் இன்று வெளிநாடுகளில் சிதறுண்டு வாழ்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. போராளிக்குழுக்களின் தலைமைகளின் வழிநடத்தலே காரணம் என்பது உண்மை இன்று எமது விடுதலைப் போராட்டத்தை உண்மையான தெளிவான பாதையினூடாக தான் முன்னெடுத்து செல்லவேண்டியவர்களாக நாம் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கு அன்றிலிருந்து இன்றுவரை விடுதலைப்புலியின் தலைமை செய்த பலகீழ்த்தரமான நடவடிக்கைகளையும் அவை எமக்கு உணர்த்திய பாடங்களையும் நாம் என்றும் மறக்கமுடியாது. இன்று ஈழத்தில் உண்பதற்காக மாத்திரம் தான் எம்மினத்தவர்களுடைய வாய்கள் திறக்கப்படுகிறதென்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. இதற்கு காரணம் மனித நேயமற்ற புலிகளே என்பதை அனைவரும் அறிவர்.

அன்பானவர்களே சிறிது சிந்திக்க கடவீர்!

இன்று எமது விடுதலைப் போராட்டம் மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. ஆண்டாண்டு காலமாக, பரம்பரைபரம்பரையாக வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்கள் இன்று ஈழத்திலிருந்து விரட்டியடிக்கப்படுவது வேதனைக்குரிய ஒன்றே. தெளிவற்ற போக்குக் கொண்ட விடுதலைப்புலியின் தலைமை செய்கின்ற இச்செயல்களினால் அப்பாவித் தமிழ் முஸ்லீம்கள் தங்களை தாங்களே அழித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று பச்சிளம் பால்குடிமறவாப் பாலகர்கள் கையில் ஆயுதங்களை கொடுத்து அப்பாலகர்களின் பிணங்களில் குளிர்காயும் புலியின் தலைமைக்கு காலம் பதில் சொல்லும் என்பது உண்மை.

ஒருகணம் சிந்தியுங்கள்!!

நாம் வரலாற்றின் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு புறத்திலே இலங்கையரசின் கொடுமைகள் மறுபுறம் [illegible] கொடுமைகள். இவர்கள் இரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வித அரைகுறை தீர்வுகளோ அல்லது நிரந்தர தீர்வோ கிடைக்கப் போவதில்லை. மேலும் அழிவுகளையே சந்திக்க வைக்குமென்பதுண்மை.

தமிழ் பேசும் மக்களே!!

முதலில் எமக்குள் மோதலை உருவாக்குவது எமது போராட்டத்திற்கு மாசு கற்பிப்பதாகும். இன்று எம்மத்தியில் இருக்கும் எம் எதிரியான விடுதலைப் புலியினரை தூக்கி எறிவோம். ஆகவே எமக்குள் விரோத மனப்பான்மையை துறந்து பழிவாங்கும் நடவடிக்கையை கைவிட்டு முற்போக்கு எண்ணங்கொண்ட தெளிவான பாதையினூடாக எம்மை இணைத்துக் கொள்வோம். என்கருத்துக்களையும் எண்ணங்களையும் உங்களோடு வெகுஜனம் வாயிலாக பகிர்ந்துகொண்டதையிட்டு பெருமையடைகிறேன்.

## உண்மை

கவிதை-

அவர்கள் கைகள்
கட்டப்பட்டிருக்கிறது
அதனாலே எழுத முடியவில்லை
வாய்கள் உண்பதற்கு
மாத்திரம் தான் என்பது
உண்மை அதனாலே
அவர்களால்பேசமுடியவில்லை
இது இங்கல்ல
எங்கள் நாட்டிலே!!!

பீ.குலம்.

# வெகுஜனம்

அரசியல், இலக்கிய,
கலாச்சார இதழ்.

காலம் - இரு மாதங்களுக்கொரு
முறை வெளிவருகிறது.

ஆசிரியர் - வெகுஜனம் குழு.

ஓவியம் - ரி. தாசன்.

இலங்கை நிருபர்- கு. புத்திரன்.

சந்தா - வருடமொன்றுக்கு
இருபது டி. எம்.

தனி இதழ் - மூன்று டி. எம்.

வெளியீடு -
VEKUJANAM PUBLICATION S
MITTWEG STR - 21
4300 ESSEN - 1
GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கியப்படுவோம்

# போராடுவோம்

# அமைதி காண்போம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்